Registered as a News Paper in Sri-lanka


விலை : ரூபா 10 .00

# தினமுரசு
THINAMURASU
தினப்பதிப்பு





முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 தை 28 ஞாயிற்றுக்கிழமை (10.02.2013) பக்கங்கள் 20 ஓசை – 133











## தனியார் பஸ் உரிமையாளர் பிரச்சினை ஒரு மாதத்தில் கிடைக்கும் தீர்வு!

### அமைச்சர் ரட்ணாயக்க உறுதியளிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு மாத காலத்திற்குள் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் சி.பி. ரட்ணாயக்கா உறுதியளித்துள்ளார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் சி.பி.ரட்ணாயக்கா தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் றோசான் குணரட்ண, இதர தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியத் துணைத் தூதுவரின் செயலர் வீட்டில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

இந்தியத் துணைத் தூதுவரின் செயலாளர் வீட்டில் பெறுமதியான உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ். குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் நேற்று முன்தினம் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்து சுமார் 22 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். குற்றத்தடுப்பு பொலிஸார்

19 ஆம் பக்கம் பார்க்க

# எல்லா நாட்டிலும் எதிர்ப்பு; கவலைப்படாத ஜனாதிபதி



(திருப்பதி)

பல நாடுகளில் தமக்கு எதிர்ப்பு இருந்த போதிலும் அதைப் பற்றியெல்லாம் தாம் கவலைப்படப்போவதில்லையென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திருப்பதியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் இந்தியாவுக்கு பயுணமானார்.

அவரது விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழகம், புதுடில்லி மற்றும் பீகார் மாநிலங்களில் ம.தி.மு.க., தி.மு.க. கட்சிகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தன.

இவ்வாறான எதிர்ப்புகளுக்கு மத்தியில், நேற்று முன்தினம் புத்தகாயாவிலுள்ள மகா போதி விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்ட ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர், நேற்று முன்தினம் மாலையே திருப்பதி புறப்பட்டனர்.

ஜனாதிபதியின் இந்த விஜயம் காரணமாக குறித்த பிரதே

19 ஆம் பக்கம் பார்க்க

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

இந்தியாவுக்கான விஜயத்தை நிறைவு செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விசேட விமானத்தில் நேற்றைய தினம் நாடு திரும்பினார்

இந்தியாவிற்கு விஜயம் செய்த அவர் தனது விஜயத்தின் இறுதி அங்கமாக திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு நேற்று சென்றிருந்தார்.

அதிகாலையில் இடம்பெறும் சுப்ரபாத சேவையில் அவர் சுவாமி தரிசனம் மேற்கொண்டுள்ளார்.

பின்னர் கோவில் ரங்க

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா மாநாட்டுடன் பொருளாதாரத் தடை

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணையொன்றைக் கொண்டுவரவுள்ளதாகத் தெரிவித்துள்ள நிலையில், குறித்த மாநாட்டுடன் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தேசப்பற்றுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## தேசியக் கொடி அவமதிப்பு; 4 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

தேசியக் கொடியினை அவமதித்ததாகத் தெரிவித்து கோப்பாய் பகுதியைச் சேர்ந்த நான்கு இளைஞர்களைக் கைது செய்துள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்திப்பகுதியில் வைத்து நேற்று முன்தினம் மாலை குறித்த நான்கு இளைஞர்களும் தேசியக் கொடியினைக் காலால் மிதித்த தாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களும் பொலிஸ்

19 ஆம் பக்கம் பார்க்க

## தாய்ப்பால் புரைக்கேறி 4 மாதக் குழந்தை உயிரிழப்பு?

(யாழ்ப்பாணம்)

மர்மமான முறையில் இறந்த நான்கு மாத ஆண் குழந்தை ஒன்றின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக நேற்று முற்பகல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த முரளிதரன் டிலைக்சன் என்ற நான்கு மாதக் குழந்தையின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பால் குடித்துவிட்டு குழந்தையைத் தாய் படுக்கவைத்ததாகவும், அதன் பின்னர் நேற்று அதிகாலை 4.00 மணியளவில் குழந்தையைத் தாய் பார்த்தபோது குழந்தை இறந்து காணப்பட்டுள்ளது. இதனையடுத்தே குறி

19 ஆம் பக்கம் பார்க்க

## ராஜீவ் கொலையாளிகளுக்கும் விரைவில் தூக்குத் தண்டனை?

(புதுடில்லி)




மும்பைத் தாக்குதல் வழக்கின் குற்றவாளி அஜ்மல் கசாபுக்கும், நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அப்சல் குருவுக்கும் இரகசியமாக தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரின் கருணை மனுக்களும் இந்திய

19 ஆம் பக்கம் பார்க்க

## நிவாரணம் வழங்க வலியுறுத்தி மன்னார் விவசாயிகள் உண்ணாவிரதம்

(மன்னார்)

கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட தமக்கு நிவாரணங்களைப் பெற்றுத்தர வலியுறுத்தி மன்னார் மாவட்ட விவசாய அமைப்புக்களும், விவசாயிகளும் எதிர்வரும் 18 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டமொன்றை மன்னார் உயிலங்குளத்தில் நடத்தவுள்ளனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சியினால் மன்னார் மாவட்டத்தில் விவசாய நடவடிக்கை அழிவடைந்தது. இந்தநிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எதிர் நோக்கியுள்ள நஷ்டங்களை ஈடுசெய்யும் முகமாக அவர்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் நேற்றைய தினம் விசேட கூட்

19 ஆம் பக்கம் பார்க்க



# சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டுவிழா

(யாழ்.நிருபர்)

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டுவிழா இன்று கொழும்பு - 05 நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள சாலிகா மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய அறங்காவலரும், விழாக்குழுத் தலைவருமாகிய டி.எம்.சுவாமிநாதன் தலைமை தாங்கவுள்ளார்.

கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் பூஜ்யசுவாமி சர்வரூபானந்தாஜி மஹாராஜ் மற்றும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இலங்கை சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி தர்ஷினி சைதன்யா ஆகியோர் ஆசியுரையை வழங்குவார்கள்.

நண்பகல் 12.30 மணிக்கு இந்து சமய அமைப்புக்களின் கண்காட்சி சாலிகா மைதானத்தில் ஆரம்பமாகும். பகல் 1.00 மணிக்கு மயூராபதி பத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து சாலிகாமைதானம் வரை கொழும்பு மாநகர இந்து மக்களின் விசேட ஊர்வலமும் நடைபெறும். (10)

# உரிமைகோராத வாகனங்கள் அடையாளம் காண நடவடிக்கை

(கிளிநொச்சி)

வன்னியில் உரிமை கோரப்படாது கைவிடப்பட்ட நிலையிலுள்ள வாகனங்களில் நேற்று முன்தினம் வரை 800 வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டு இயந்திர இலக்கம், அடிச்சட்ட இலக்கம் போன்றவை பதிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள பரிசோதகர் ஜயம்பதி தெரிவித்தார்.



இந்த வாகனங்களில் நல்ல நிலையிலுள்ள வாகனங்கள், பாவிக்க முடியாத வாகனங்கள் என தரம்பிரித்து அவற்றினை மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனிடம் கையளிக்கப்படும் எனவும் அவற்றை உரிமையாளர்களிடம் கையளிப்பதோ அல்லது ஏலத்தில் விடுவதோ என்ற இறுதித் தீர்மானத்தினை வருகைதந்திருக்கும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அணிக்கு தலைமை தாங்கும் மோட்டார் போக்குவரத்து திணைக்கள பரிசோதகர் ஜயம்பதி தெரிவித்தார்.

இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பரிசோதகர் ஜயம்பதி தலைமையில் வருகைதந்துள்ள பதினொரு பேர்கொண்ட குழுவினர் ஏற்கனவே முல்லைத்தீவில் தமது பணிகளை முடித்து கடந்த வியாழக்கிழமை வவுனியாவிலும் நேற்று முன்தினம் கிளிநொச்சியிலும் தங்களது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்.நிருபர்)

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.00 மணிக்கு கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ஸ்ரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (10)

## பாரதி சனசமூக நிலையத்தில் இலவச தையல் பயிற்சி

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையத்தினால் உங்கள் நண்பன் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள இலவச தையற்பயிற்சி ஆரம்பவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நிலையத்தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக 'உங்கள் நண்பன்' நிறுவனத்தின் தலைவர் கே.செவ்வேளும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகரசபை சனசமூக நிலைய உத்தியோகத்தர் எஸ்.லோகசிவமும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (08)

## நூல் வெளியீடு

(வரணி)

வரணியூர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் எழுதிய வரணியின் மரபுரிமைகள் பாகம் 1 என்ற நூல் வெளியீட்டுவிழா வரணி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 2 மணிக்கு நடைபெறவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு அதிபர் மங்களேஸ்வரர் தலைமை தாங்குகிறார்.

ஜனாதிபதியின் கௌரவ ஆலோசகரும் இந்து பௌத்த கலாசார பேரவை செயலாளருமான எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (130)


வடக்கு மாகாணத்துக்கான விசேடமாக வழங்கப்படவுள்ள 1500க்கும் மேற்பட்ட தொழில்வாய்ப்புக்களை பெறும் உத்தரவாதத்துடன் University of Wollongong Australiaவில் பட்டக்கல்வி வாய்ப்பையும் வழங்கும்

**Business & Marketing Communications (வணிகத் தொடர்பாடல் கற்கைகள்)**

Introductory ▶ Certificate ▶ Diploma ▶ Degree

( ஒவ்வொருவருடைய தனிப்பட்ட சுய ஆற்றல்கள், திறமைகளை இனங்காணல், ஆளுமை விருத்தி, சுயவிபரக்கோவை தயாரிப்பு, நேர்முகத்தேர்வுக்கான விசேட பயிற்சிகளுடன் )

&



Dan தமிழ் ஒளி Lanka & அலை FM 91.4 இல்

நேரடிப் பயிற்சி, தொழில்வாய்ப்புடன் University of Wollongong, Australia பட்டக்கல்வி வாய்ப்பையும் வழங்கும்

**Mass Communications & Media Studies (ஊடகக் கற்கைகள்)**

Introductory ▶ Certificate ▶ Diploma ▶ Degree

அறிவிப்பாளர் பயிற்சி, Photography, Graphic Designing, Audio-Video Editing உடன் அச்சு, வானொலி, தொலைக்காட்சி, இணைய ஊடகக் கற்கைகள்

with

ஆங்கிலத்தில் இலகுவாக பேச, எழுத தொடர்பாடும் திறனை உறுதிப்படுத்தும் **English for Communication**

Office Software, Internet & Email பயிற்சிகளுடன் கூடிய **Information Technology**

சுயவிபரக்கோவை, தொலைபேசி இலக்கத்துடன், தொடரவிரும்பும் கற்கைநெறியை கடித உறையில் குறிப்பிட்டு, பெப்ரவரி 15ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு/மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

C/1786

சிகரம் SIKARAM — கல்வி - தொழில் வழிகாட்டி — MEDIA & EDUCATION

221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி: 0773 616 798
மி.அ.: edusikaram@gmail.com இணையம்: www.sikaram.lk


## டெங்கு ஒழிப்பு தினத்தையொட்டி நாயன்மார்கட்டில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு ஒழிப்பு தினத்தை முன்னிட்டு யாழ்.மாநகரசபையின் அனுசரணையுடன் நாளை திங்கட்கிழமை நாயன்மார்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலைய வளவிலும் அதனை அண்டிய சுற்றாடலிலும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வை யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

இச்சிரமதான நிகழ்வில் பொது சுகாதார பரிசோதகர், மாநகர இணைப்பாளர், பொலிஸ் உத்தியோகத்தர், குடும்பநல உதவியாளர், பாரதி சனசமூக நிலைய அங்கத்தவர்கள், பிரதேசத்திலுள்ள பிரமுகர்கள் எனப்பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (08)

## பொது அறிவுப் போட்டிப் பரீட்சை; மணவர்களின் விபரம் கோரல்

(யாழ்.நிருபர்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு அறநெறிச்சிந்தனைகளையும் வாழ்க்கையின் விழுமியங்களையும் கற்க வழிசமைத்துக் கொடுத்துள்ளது.

அந்த வகையில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்ககாக எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இந்து சமய பொது அறிவுப்போட்டிப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முகமாக திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து அறநெறிப் பாடசாலைகளிலிருந்தும் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

இம்மாணவர்களின் விபரங்கள் அனைத்தும் 2013 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன் The Director, Department of Hindu Religious And Cultural Affairs 248, 1/1 Galle Road Colombo - 04. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)



**வீடு விற்பனைக்கு**

சுதுமலை தெற்கில், நல்ல சூழலில் உள்ள வீட்டுடன் காணியும் விற்பனைக்கு உண்டு. வாங்குவோர் வசதிக்கேற்ப காணியில் சிறு பகுதியும் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
க.சீவறட்ணம் (சிவராசா)
றியிஸ்ரர் சம்பந்தன்
ஒழுங்கை,
சுதுமலை தெற்கு.

R 161

# தொழிலாளர்களின் பாதுகாப்பு கருதி சங்கங்கள் செயலாற்ற வேண்டும்



(யாழ்ப்பாணம்)

தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதமளிக்கும் வகையில் தொழிற்சங்கங்கள் செயலாற்ற வேண்டுமென ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை சாலைப் பணியாளர்களின் தொழிற்சங்க ஒன்றுகூடலும் புதிய நிர்வாகத் தெரிவும் இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறைசாலை முகாமையாளர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. இவ் ஒன்றுகூடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ். மாவட்டத்தில் பல தொழிற்சங்கங்கள் தோற்றம் பெற்றபோதும், சில அவற்றுள் முரண்பாடுகளை தோற்றுவித்திருந்ததுடன், அரசியல் சுயலாப நோக்கங்களிற்காகவும் பயன்படுத்தப்பட்டன.

ஆனால், இலங்கை போக்குவரத்து சாலையின் பருத்தித்துறைச் சாலைப் பணியாளர்களின் எண்ணங்களின் வெளிப்பாட்டுடன் உருவாக்கப்பட்ட இத் தொழிற்சங்கம், ஏனைய தொழிற்சங்கங்களிற்கு முன்னுதாரணமான வகையில் செயலாற்றுவதுடன், தொழிலாளர்களை ஊக்குவிக்கும்வகையில் செயற்பட வேண்டும்.

வடபிராந்திய இலங்கை போக்குவரத்து சபையில் அதிக இலாபமீட்டும் சாலையாக பருத்தித்துறை சாலை விளங்குகின்றது. எனினும் இச்சாலையில் பல குறைபாடுகள் நிலவுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. எனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஊடாக இவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் போது கருத்துத்தெரிவித்த ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி பிரதேச இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன் (ரங்கன்) எமது தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்ற ஒரேயொரு தமிழ் அமைச்சராகவும், வட இலங்கையில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்று, இப்பிரதேசங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அரசபிரதி நிதியாகவும் காணப்படுகின்றார்.

எனவே கௌரவ அமைச்சரூடாக இச்சாலையில் நிலவுகின்ற குறைபாடுகளை சீர்செய்வதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்தார்.

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் பொலிஸாரால் கைது

(புத்தூர்)

கடந்த ஆறு மாதங்களாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த பகிரங்கப் பிடியாணையாளர் ஒருவர் ஆவரங்கால் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளாதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவிக்கின்றனர். புத்தூர் பகுதியினை சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஆறு மாதங்களுக்கு முன்,தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த குற்றச்சாட்டில் பொலிஸாருக்கு தவறான வீட்டு விலாசத்தினை கொடுத்துள்ளார். இவருக்கு எதிராக நீதிமன்றம் கட்டளைகளை அனுப்பியிருந்த போது அது அவரைச் சென்றடையாததால் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் தேடப்பட்டும் வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் கடைஒன்றில் குறித்த பிடியாணை நபர் பொருள் வாங்கிக்கொண்டு இருக்கும் போது எதிர்பாராத விதமாக அக்கடைக்கு சோடா வாங்க வந்த பொலிஸார், நபரைக் கைது செய்து உடனடியாக நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதை அடுத்து 50 ஆயிரம் காசுப் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் அடுத்த மாதத்திற்கு வழக்கினை ஒத்திவைத்தார்.(15)

# கட்டாக்காலி நாய்களினால் போக்குவரத்து நெருக்கடி

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை நகர சபையினர் நாய்களைக் கட்டுப்படுத்தாமையினால் வீதிகளில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதால் பொதுமக்கள் பல அசௌகரியங்களைச் சந்தித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட கரையோரப் பிரதேசங்களான வல்வெட்டித்துறை, மயலியதனை, தொண்டைமானாறு போன்ற பகுதியில் உள்ள வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் கட்டாக்காலிகளாக வீதிகளில் அங்கு மிங்கும் திரிவதால் பொதுமக்கள போக்குவரத்து செய்ய முடியாதுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் குறித்த பகுதியில் அதிகாலை வேளையில் கட்டாககாலி நாய்களை கட்டுப்படுத்துவதற்கு யாரும் முன்வராத பட்சதில் பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தமது கடமைக்கு செல்லும்போது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (116)

# கைவிடப்பட்ட வடிகாலமைப்பு; சிரமங்களுக்குள்ளாகும் மக்கள்

(கிரு.சிகரம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதிக்கு முன்பாக உள்ள வீதியில் மழை காலங்களில் தேங்கும் நீரை வழிந்தோடச் செய்வதற்காக மேற்கொள்ளப்படவிருந்த வடிகாலமைப்புத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதால், இந்த வீதியூடாக பயணிக்கும் மாணவர்கள் மட்டுமன்றி, ஏனைய பொதுமக்களும், பெரும் அசௌகரியங்களை எதிர நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் மழை காலங்களில். வெள்ளம் தேங்கி நிற்பதாகவும், விடுதி அமைக்கப்பட்ட காலத்திலிருந்தே இந்நிலை காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் முன்னர் குளம் ஒன்று இருந்ததாகவும், அந்தக் குளத்தை மூடியே தற்போதுள்ள பெண்கள் விடுதி அமைக்கப்பட்டுள்ளதால் குறிதத பகுதி பள்ளமாகக் காணப்படுவதாகவும் குறிப்பிட்ட அவர்கள், இதனாலேயே மழை நீர் தேங்குவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

கழிவுநீர் வடிகால் அமைப்பு நிர்மாணப் பணிகளைக் கடந்த வருடம் தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஆனால், ஒப்பந்த காலம் கடந்து 17 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் இது வரையில் இது குறித்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், வடிகால் அமைப்பு நிர்மாண வேலைகள் நடைபெறாதபோது, இந்தப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எங்கே? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# டைனமற் மீன்பிடி மீனவர்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக் கடற்பரப்பில் டைனமற் வெடியைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கை மேற்கொளளப்படுவதாக யாழ். கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் மீனவர் பிரதிநிதிகளால் முறையிடப்பட்டுள்ளது.

அண்மை நாட்களாக இவ்வாறு குடாக்கடலில் - ஆழ்கடல பகுதியில் டைனமற்றைப் பயன்படுத்தி பிடிக்கப்படும் மீன்கள் சில பகுதிகள ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதாகவும் வேறு பிரதேசங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறு டைனமற்றைப் பயன்படுத்துவதனால் அந்தப் பகுதியில் வாழும் சிறிய மீனினங்கள் அழிக்கப்படுவதுடன் ஏனைய கடல்வளங்களும் அழிவுகளுக்குள்ளாகுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறைப்பாட்டையடுத்து சம்பந்தப்பட்ட பகுதிகளில் யாழ. கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் கண்காணிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இவ்வாறு சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ். கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(பா, இ)

# பொங்கல் விழா

(அச்சுவேலி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள பூவரசன் குளம் அன்ரனி முன்பள்ளியின் மாணவர்களை மகிழ்விக்கும் வகையிலான சிறப்புப் பொங்கல் நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்ரனி முன்பள்ளியின் ஆசிரியை செல்வி அமிர்தலிங்கம் அஜந்தா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பெற்றோர்கள், நலன் விரும்பிகள எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (140)

# வல்லைக் கடற்பகுதியில் இறால்பிடியில் வீழ்ச்சி

(அச்சுவேலி)

வல்லைப் பரவைக் கடலில் இறால் சீசன் தற்போது ஆரம்பிதத்துள்ள நிலையில், தொண்டைமானாறில் அமைந்துள்ள உவர் நீர் தடுப்பணையின் கதவுகள், இரவுவேளைகளில் வேறு சில மீனவர்கள் திறப்பதால், வல்லைப் பரவைக் கடலினை நம்பி இறால் பிடியில் தற்போது ஈடுபட்டு வரும் மீனவர்கள் பாதிக்கப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

வல்லைப் பரவைக் கடலினை நம்பி நூற்று ஐம்பது மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு தமது ஜீவனோபாயத்தினை நடத்தி வருகின்றனர்.

தற்போது குளிர்காலம் நிலவுவதால் அதிக இறால் பிடிபடுவதாகவும், ஒரு சில மீனவர்களின் இவ்வாறான வேண்டாத நடவடிக்கையால் அதிகளவான இறால் நீரோட்டத்துடன் தொண்டைமானாறு கடற்பகுதிக்கு அடித்துச் செல்வதால் இறால் பிடியில் வீழ்ச்சி காணப்படுவதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள், இதனை கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (15)





யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது யாழ். மாநகர பிரதி மேயர் எம்.ரமீஸ், அதிபர் முபாரக் மௌலவிமார்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பிரார்த்தனையில் ஈடுபடுவதையும், அதிபர் முபாரக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டி வைப்பதையும் காணலாம். (105)

ஒருவனுக்கு அறிவு இருந்தும் ஆற்றல் இல்லையெனில் அவன் வாழ்வு சிறக்காது. - ஷாம்பர்ட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## யார் வருவார்; எது தருவார்?

வெளிநாட்டு மோகத்தை இவ்வளவு உச்சநிலையில் கொண்டிருக்கும் வேறு சமூகங்கள் உலகில் உண்டா தெரியவில்லை. இளைஞர்கள் உள்நாட்டுக்குள் உழைத்து வாழ்வதில் நம்பிக்கை இழந்தவர்களாக, வெளிநாடு செல்லும் கனவில் இருக்கிறார்கள். அரசியல்வாதிகளோ நம் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வெளிநாடுகள்தான் ஏதாவது செய்ய வேண்டுமென அந்த ஒரே மாயைக்குள்ளேயே மக்களையும் வைத்துக் காத்திருக்கிறார்கள்.

தமிழ் ஊடகங்களும் காலத்துக்குக் காலம் வந்துபோகும் சர்வதேச மகாநாடுகள் மீது ஏதோ பந்தயப்பணம் கட்டிவிட்டிருப்பதைப் போல விறுவிறுப்பான எதிர்பார்ப்புகளைச் சொல்லிக் கூச்சலிட்டு மக்களுக்கு வேடிக்கை காட்டி ஓய்வதையே கடமையாகக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் எல்லோருமே இலங்கை தமிழ்மக்களுக்குமான நாடுதான், இதற்குள்தான் நாம் வாழ்வதற்கான வழியைக் கண்டுகொள்ள வேண்டும் என்ற யதார்த்தத்தை நேர்நோக்கும் திராணியற்று, சும்மா மக்களை ஏய்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்மக்களின் அரசியல் உபாயமும் ராஜதந்திரமும் வெளிநாடுகளைக் கெஞ்சியபடி இருப்பதுதான் வேறெதுவுமில்லை என்றாக்கி விட்டிருக்கிறார்கள். வெளிநாடுகள் நமக்கு என்ன செய்யும் என்றும் யாருக்கும் சொல்லத் தெரியவில்லை. நமக்கு இன்னதுதான் வேண்டும் என்பதையும் இவர்கள் யாரும் சொல்லக் காணோம்.

எதையோ நம்பி இவர்களுக்கு வாக்களித்த மக்கள் தொடர்ந்தும் எதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்? அவர்களுக்கும் அது தெளிவில்லை; தெரியவில்லை. ஏதாவதொரு சர்வதேச நாடு இலங்கை அரசுக்கு எதிராக எதையாவது சொல்லிவிட்டால் உடனே அதைத் தூக்கிப்பிடித்து, சர்வதேசம் பிடியை இறுக்குகிறது; நமக்கான காலம் கனிகிறது என்று கயிறுதிரித்துக் காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய போர்க்குற்றச்சாட்டுப் பேச்சுகளாலும், அமெரிக்காவோ தென்னாபிரிக்காவோ சர்வதேச மனிதஉரிமைப் பேச்சாளர்களோ இலங்கை அரசினரிடம் பிழை இருக்கிறதுதான் என்று இடைக்கிடை திருவாய்மலருவதாலும், ஜெனீவாவில் ஏதாவது தீர்மானம் கொண்டுவந்து காலக்கெடு வைப்பதாலும் தமிழ் மக்களாகிய நமக்கு எப்படி விடிவு வந்து சேரப்போகிறது என்னும் அந்த மார்க்கத்தை யாரும் விளக்குவதாய்க் காணோம்!

அப்பப்ப இலங்கை அரசுக்கெதிரான கொடியை, யாரையேனும் அல்லது எதையேனும் நம்பி ஆவேசமுற்றுப் பிடிப்பதும் பின்னர் அது அடங்கி, மற்றொன்றை நம்பிப் பிடிக்க ஓடுவதுமாய்... எமது மக்களின் விடிவுக்காக நம்மிடம் உள்ள அரசியல் அணுகுமுறை அல்லது தந்திரோபாயம் இவ்வளவுதானா?

ஜெனீவாவில் தீர்மானம் போட்ட பிறகு இலங்கை அரசிடம் அமெரிக்கா பேசி நமக்கான தீர்வை எடுத்துத் தரும் என்பதா இவர்களது எதிர்பார்ப்பு? அல்லது அதன்பிறகும் நாமேதான் அரசுடன் பேச வேண்டியிருக்குமா? நாமேதான் பேச வேண்டுமென்றால், இன்னும் எத்தனை மகாநாடுகளுக்குப் பிறகு நாம் அந்த முடிவை எடுக்கப் போகிறோம்? முன்னர் இருந்ததை விட, இதன்பிறகு பேச்சில் நமக்கு விசேடமான நிலைமை எப்படி உருவாகப் போகிறது?

ஏனென்றால், முன்னொருகாலம், இலங்கை அரசாங்கத்தை மிரட்டுவதற்காக இந்தியா தானாக முன்வந்து நமக்கு உதவிகள் செய்தது. இலங்கை அரசு இந்தியாவுடன் சினேகமாகி, அந்தப் பிரச்சினையை எளிதில் கடந்துவிட்டது. இப்போது அமெரிக்கா எதையோ செய்யப் போகிறது என்று மக்களைக் கனவிலிருத்துகிறார்கள்.

இலங்கை அரசு அமெரிக்காவைப் பார்த்தும் சிநேகமாகத் தலையசைத்த பிறகு, இவர்கள் அடுத்து யாரை நம்பி, எதற்குக் காத்திருக்கச் சொல்லப் போகிறார்கள் என்பதை இப்போதே நாம் தெரிந்து கொள்வது நல்லதில்லையா!

- ஆசிரியர்

# சுன்னாகம் மின்சார நிலையத்தை ஜனாதிபதி மகிந்த திறந்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மின்சார நிலையத்தை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார். நாளை மறுதினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி இந்த மின் நிலையத்தையும் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார்.

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடாநாட்டில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார். அன்று காலை ஜப்பான் அரசின் நிதியுதவியால் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் மூன்று மாடி கட்டத்தினை திறந்துவைக்கவுள்ளார். இதில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பாரம்பரிய சிறுகைத்தொழில் அபிவிருத்தி முயற்சிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் குனியோ டகஹஷீ ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்,

இதேவேளை அன்றைய தினம் சுன்னாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மின்சார நிலையத்தினையும் ஜனாதிபதி அவர்கள் திறந்து வைக்கவுள்ளார்

# வெள்ளத்தில் மிதக்கும் நெல் வயல்கள்; அறுவடைப் பருவத்தில் அலங்கோலம்

(யாழ்ப்பாணம்)

கால நிலை மாற்றத்தின் நிமித்தம் அண்மையில் பெய்த மழையினால் வயல்களில் தேங்கி நிற்கும் வெள்ளம் காரணமாக அறுவடைசெய்ய முடியாத நிலையிலும், அறுவடை செய்த நெற்கதிர்களை வயற்பரப்பில் சூடுவைத்து, சூடடிக்க முடியாமலும் விவசாயிகள் பலர் கவலையடைந்தவர்களாக காணப்படுகின்றார்கள்.

குறிப்பாக யாழ்.- செம்மணி ஏ.9 வீதியில் அமைந்துள்ள கிழக்குப்பக்க சில வயல்களில் தற்பொழுதும் வெள்ளம் நிறைந்து காணப்படுவதால், அறுவடைக்குத்தயாரான நெற் கதிர்கள் அனைத்தும் தண் ணீரில் நனைந்து கிடப்பதோடு, சில விவசாயிகள் இவ்வாறான நெற்கதிர்களை அறுவடை செய்து, வயல், வரம்புகளில் காய வைத்து, பின் உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

இது குறித்து நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்த விவசாயி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இம்முறை நெல்லை விதைத்துவிட்டு, நெல் முளை வரும் நேரம் மழை இல்லை யென்று கவலைப்பட்டோம். அதன்பின் அடுத்தடுத்து பெய்த மழையினாலும் இவ்வாறு பெய்த மழை பருவம் தப்பிப் பெய்ததாலும், இப்பொழுது அறுவடை செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம்.

வெள்ளத்தில் கிடக்கும் நெற்கதிர்களை அறுவடை செய்து வெளியில் காயவைத்து, அதைப்பிறகு இன்னொரு இடத்திற்கு கொண்டு போய் சூடடிப்பதென்பது, வழமையாக வயல்களில் சூடு வைத்து அடிப்பதை விட மிகவும் செலவானதாகிறது என அவர் கவலையுடன் தெரிவித்தார். (138)

## சிறைக்கூடத்தில் இப்படியும் நடந்தது

கொழும்பு-வெலிக்கடை சிறைச்சாலைக் கைதியொருவர், கைத்தொலைபேசியை மலவாயிலில் மறைத்து வைத்திருந்த சந்தர்ப்பத்தில், அதன் ரிங்டோனினால் சிறை அதிகாரிகளிடம் சிக்கிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

திருட்டு குற்றச்சாட்டொன்றின் பேரில் 10 வருடகாலம் சிறைத் தண்டையை அனுபவித்து வரும் 58 வயதான குறித்த கைதியை தடுத்து வைத்திருந்த அறையில், சிறைச்சாலை அதிகாரிகள் தேடல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இத்தேடுதலின் போது கைதியிடமிருந்த கைத்தொலைபேசியிலிருந்து அலறல் சத்தம் கேட்டுள்ளது. எனினும், அவரைச் சோதித்துப் பார்த்த சிறை அதிகாரிகள் அவரிடமிருந்த கைத்தெலைபேசியைக் கண்டுபிடிக்கவில்லை.

இருப்பினும், கைத்தொலைபேசி அவரிடம் இருப்பதை சிறைச்சாலை அதிகாரிகள் உறுதிசெய்தமையையடுத்து, அந்தக் கைதியை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இதன்போது, குறித்த கைதி மலவாயிலில் கைத்தொலைபேசியை மறைத்து வைத்திருப்பதை வைத்தியர்கள் கண்டுபிடித்ததுடன், அதனை வெளியே எடுத்துள்ளனர்.

அதன் பின்னர் இரு நாட்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர் அந்தக் கைதி சிறைக்குத் திரும்பியுள்ளார்.

# பிணையில் விடுதலையானவர்கள் நீதிமன்றுக்கு "தண்ணி" காட்டினர்

அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முயன்ற குற்றச்சாட்டின் பேரில் கைதாகி பிணையில் விடுக்கப்பட்ட சந்தேகநபர்களில் 14 பேர் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா சென்று விட்டனர்.

101 சந்தேகநபர்கள் மே 2012 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்லமுயன்றதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கபுலி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே கொழும்பு மோசடிப்பிரிவு பொலிஸார் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்த 14 பேரையும் பிணையில் எடுத்தவர்கள் நீதிமன்றத்தில் இருப்பதாக கொழும்பு மோசடிப் பிரிவு பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தனர். இவர்களிடமிருந்து வாக்குமூலங்களை பெற்றுக்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

புகலிடம் கோரிய 101 பேரை அவுஸ்ரேலியாவுக்கு களவாக அனுப்புவதில் முக்கியமாக பங்காற்றிய ஏழு பேரை பெப்ரவரி 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான், 81 சந்தேகநபர்களையும் ஜுன் 28 ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

அவுஸ்ரேலியாவுக்கு சென்றுள்ள ஏனைய 14 சந்தேக நபர்கள் மீதும் நீதவான் பிடியாணை பிறப்பித்தார்.

# கிழக்கு அரசியல் வானில் மேற்கிளம்பும் குழப்பம்

## ஹக்கீமுக்கு புதிய தலைவலி

(கொழும்பு)

முஸ்லிம்காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத்திற்கு அமைச்சுப்பதவி வழங்கப்பட்ட கிழக்கு அரசியல் வட்டாரத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. மேற்படி அமைச்சர் பதவி வழங்கப்பட்டமை குறித்து ஒரு மாத காலத்திற்குள் தமது கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும். இல்லையேல் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தை எச்சரித்துள்ளார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு குறைந்தளவு ஆதரவு கிடைத்த மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்ட போதிலும், 80000 வாக்குகள் கிடைத்த அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு எவ்வித பதவிகளும் வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத்திற்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது.எனினும், அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு பதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை. அரசாங்கம் ஒரு மாத காலத்திற்குள் உரிய தீர்வினை வழங்காவிட்டால், பதவி விலகப் போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சங்கர சிவன்

# தலைவர்களின் சுயநல அரசியலால் துயரம் சுமக்கும் தமிழ்மக்கள்

அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாடு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்ற நம்பிக்கையை வளர்ப்பதற்காகத் தமிழ்த் தலைவர்களும் தமிழ் ஊடகங்களும் வரிந்து கட்டிக் கொண்டு செயற்படுவதைப் பார்க்கின்றோம். இதே தலைவர்களும் ஊடகங்களும் தமிழ் மக்களுக்கு அச்சமூட்டும் பிரசாரத்தில் சில காலம் ஈடுபட்டிருந்ததையும் பார்த்தோம். அதாவது சர்வதேச சமூகம் அர்த்தபூர்வமான முறையில் தலையிடாவிட்டால் தமிழினம் அழிந்துவிடும் என்ற கருத்தை வெவ்வேறு வார்த்தைகளில் வலியுறுத்தினார்கள்.

இது தமிழ்த் தலைவர்கள் காலங்காலமாகப் பின்பற்றி வரும் தந்திரோபாயம். அப்படி ஆபத்து



**இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சர்வதேச சமூகத்தினால் எதுவும் நடக்கப்போவதில்லை என்பதும் சர்வதேச சமூகம் எவ்வளவு தான் அழுத்தம் பிரயோகித்தாலும் இறுதியில் அரசியல் தீர்வு சிங்கள மக்களின் ஆதரவிலேயே தங்கியுள்ளது என்பதும் தெரியாதவர்களல்ல இந்தத் தமிழ்த் தலைவர்கள். சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான சிரமம் மிகுந்த முயற்சியில் ஈடுபடுவதிலும் பார்க்க, வழமையான 'ஒப்பாரி' அரசியலின் மூலம் தங்கள் நாடாளுமன்றப் பதவிகளை இலகுவாகப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்று இவர்கள் கருதுகின்றார்கள்.**

வரப்போகின்றது இப்படி ஆபத்து வரப்போகின்றது என்று முதலில் மக்களுக்கு அச்சமூட்டுவது பின்னர், வரவுள்ள ஆபத்தைத் தவிர்ப்பதற்கு எல்லோரும் ஒன்றுபட்டு எங்களுக்கு வாக்களியுங்கள் எனக் கூறித் தங்கள் நாடாளுமன்ற பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வது. ஒவ்வொரு தேர்தலிலும் இத்தலைவர்கள் இந்தத் தந்திரோபாயத்தையே பின்பற்றி வந்திருக்கின்றார்கள்.

இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சர்வதேச சமூகத்தினால் எதுவும் நடக்கப்போவதில்லை என்பதும் சர்வதேச சமூகம் எவ்வளவு தான் அழுத்தம் பிரயோகித்தாலும் இறுதியில் அரசியல் தீர்வு சிங்கள மக்களின் ஆதரவிலேயே தங்கியுள்ளது என்பதும் தெரியாதவர்களல்ல இந்தத் தமிழ்த் தலைவர்கள். சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான சிரமம் மிகுந்த முயற்சியில் ஈடுபடுவதிலும் பார்க்க, வழமையான 'ஒப்பாரி' அரசியலின் மூலம் தங்கள் நாடாளுமன்றப் பதவிகளை இலகுவாகப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்று இவர்கள் கருதுகின்றார்கள். அதனால், சர்வதேச சமூகத்தின் மீது எல்லாப் பொறுப்பையும் போட்டுவிட்டுச் சர்வதேச சமூகத்தை வழிநடத்துபவர்கள் போன்ற பாவனையில் அடிக்கடி வெளிநாட்டுப் பிரயாணத்தை மேற்கொள்வதும் மக்களின் ஆதரவைத் தக்கவைப்பதற்காக ஆவேச அரசியல் நடத்துவதுமாகக் காலத்தைக் கடத்துகின்றார்கள். இவர்கள் கச்சிதமாகக் கட்டி வளர்த்திருக்கும் சர்வதேச சமூகம் என்ற மாயை உடைந்துவிழும் போதுதான் மக்களுக்கு உண்மை விளங்கும்.

மக்களுக்குத் தலைமை தாங்குபவர்களிடம் இருக்கவேண்டிய இரண்டு பிரதான பண்புகள் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வில் நேரடியாக ஈடுபடுவதும் தங்களை நம்பிய மக்களை ஏமாற்றாதிருப்பதுமாகும். இந்த இரண்டு பண்புகளும் கூட்டமைப்புத் தலைவர்களிடம் இல்லை. இனப்பிரச்சினைக்கு சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறுவதைத் தவிர, அரசியல் தீர்வுக்காக இவர்களின் நேரடியான ஈடுபாடு எதுவும் இல்லை. நேரடியான ஈடுபாட்டின் முதலாவது கட்டம் தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்து வெளியிடுவதாகும். இன்று வரை கூட்டமைப்பு அதைச் செய்யவில்லை. சர்வதேச சமூகம் பற்றிக் கூட்டமைப்புத் தலைவர்கள் ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு கதையைக் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் அரசாங்கத்தின் கதவைத் தட்டுகிறது என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின்போது கூறினார்கள். அது பொய் என்றாகி விட்டது. மார்ச் மாத ஜெனிவா மாநாட்டுக்குப் பின் அரசாங்கம் பணிந்து வந்துவிடும் என்று இப்போது சொல்கின்றார்கள். இதுவும் பொய்யாகவே முடிந்துவிடும்.

சர்வதேச சமூகம் தலையிடாவிட்டால் தமிழினம் அழிந்துவிடும் என்று இத்தலைவர்கள் கூறுவதன் நேரடி விளக்கம் தங்களால் எதுவும் செய்ய இயலாது என்பதாகும். நம்பிக்கை வைத்துத் தெரிவு செய்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எதுவும் செய்ய இயலாதென்றால் ஏன் இவர்கள் தொடர்ந்தும் தலைவர்களாக இருக்க வேண்டும்?

தமிழர்களைச் சர்வதேசம் காப்பாற்ற வேண்டும் என்று இன்றைய தலைவர்கள் கூறும் பாணிலேயே தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று நாற்பது வருடங்களுக்கு முன் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சொன்னார். கடவுள் காப்பாற்றியதாலோ என்னவோ இன்றும் த மி ழ் மக்கள் வாழ்கின்றார்கள். ஆனால், பின்னடைவுகளையும், இழப்புக்களையும் அனுபவித்துக் கொண்டே வாழ்கின்றார்கள். இந்தப் பின்னடைவுகளுக்கும் இழப்புகளுக்கும் கடவுள் காரணமல்ல. நாற்பது வருட காலத்தில் தமிழ்த் தலைவர்கள் விட்ட தவறுகளே இவற்றுக்குக் காரணம்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தைச் சிங்களத் தலைவர்கள் நிராகரித்து விட்டார்கள் என்றும், அது நடைமுறைக்கு வந்திருந்தால் இனப்பிரச்சினை எப்போதோ தீர்ந்திருக்கும் என்றும் கூட்டமைப்புத் தலைவர்கள் அடிக்கடி கூறுகின்றார்கள். எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் மருமகன் ஏ.ஜே. வில்சன் அரசறிவியல் பேராசிரியர். தனது மாமனாரின் அரசியல் வாழ்க்கை பற்றி எழுதிய புத்தகத்தில் அவர் குறிப்பிட்டுள்ள ஒரு சம்பவத்தைப் பார்ப்போம்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான ஐக்கிய முன் னணி அரசாங்கம் முதலாவது குடியரசு அரசியலமைப்பைத் தயாரித்துக்கொண்டிருந்த காலத்தில் மு.திருச்செல்வத்துக்கூடாக எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்கு ஒரு செய்தியை அனுப்பியது. அரசியலமைப்பைத் தயாரிப்பதில் தமிழரசுக் கட்சி ஒத்துழைப்பு வழங்கினால் பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் முக்கியமான சரத்துகளை அரசியலமைப்பில் உள்ளடக்கலாம் என்பதே அச்செய்தி. தமிழரசுக் கட்சி அந்த அழைப்பை நிராகரித்துவிட்டது.

பண்டா-செல்வா ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்திருந்தால் இனப்பிரச்சினை தீர்ந்திருக்கும் என்று இன்று கூறுபவர்கள், அதற்கான சந்தர்ப்பம் கிடைத்தபோது அதை நிராகரித்து விட்டார்கள். இதை அத்தலைவர்களின் தவறு என்பதற்குப் பதிலாகத் தமிழ் மக்களுக்குச் செய்த துரோகம் எனக் கூறுவதே பொருத்தமானது.

சமஷ்டித் தீர்வைக் கைவிட்டுவிட்டு நடைமுறைச் சாத்தியமற்ற தனிநாட்டுத் தீர்மானத்தை மேற்கொண்டது அடுத்த தவறு. 1970 பொதுத் தேர்தலில் ஊர்காவற்றுறை நவரத்தினத்தின் தமிழர் சுயாட்சிக் கழகம் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துப் பிரசாரம் செய்தது. தனிநாட்டுக் கோரிக்கை தமிழ் மக்களுக்குப் பாதகமான விளைவு-களைக் கொண்டுவந்துவிடும் என்று அப்போது தமிழரசுக் கட்சி எதிர்ப் பிரசாரம் செய்தது. தேர்தல் முடிந்து சிறிது காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைத்துத் தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.


பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டையில் தமிழரசுக் கட்சியின் அமிர்தலிங்கமும் உடுப்பிட்டியில் தமிழ் காங்கிரஸின் சிவசிதம்பரமும் தோல்வியடைந்த நிலையில், இரண்டு கட்சிகளும் இணைந்து தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்ற சிந்தனையின் விளைவாக உருவாகியதே தமிழர் விடுதலைக் கூட்டணி. சமஷ்டிக் கொள்கையைப் பின்பற்றிய தமிழரசுக் கட்சியும் அக்கொள்கையைத் தீவிரமாக எதிர்த்த தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் கூட்டுச் சேர்வதற்குச் சமஷ்டி அல்லாத கொள்கை தேவைப்பட்டதால் தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். இது தலைவர்களின் சுயநலத்துக்காக நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பவாதத் தீர்மானம்.

தமிழரசுக் கட்சி 1970 தேர்தல் பிரசாரத்தில் கூறியது போல, தனிநாட்டுத் தீர்மானம் தமிழ் மக்களுக்குப் பாதகமான விளைவையே கொண்டு வந்தது. கடந்த முப்பது வருடங்களிலும் அதன் பின்னரும் தமிழ் மக்கள் அனுபவித்த இழப்புகளுக்கும் இன்னல்களுக்கும் இத்தீர்மானமே காரணம். பேரினவாதிகள் பலமடைவதற்கும் தனிநாட்டுத் தீர்மானம் காரணமாகியது. தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக் கோரிக்கையை சிங்கள மக்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலையையும் தனிநாட்டுத் தீர்மானம் தோற்றுவித்தது.

(17ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளுக்கு ஊக்குவிப்பு செயற்திட்டம் நிறுத்தப்பட்டது ஏன்?

## நோர்வே தூதுவருக்கு எதிராக வழக்கு



(கொழும்பு) சமாதான முனைப்புக்களை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தை ஒருதலைப்பட்சமாக இரத்துச் செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நோர்வே அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது.

நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் உட்பட மேலும் பல இராஜதந்திரிகளுக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

சகவாழ்வு மன்றத்தின் பணிப்பாளர் குமார் ரூபசிங்க இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

நோர்வே தூதரக அதிகாரிகள் மற்றும் முன்னாள் இலங்கைக்கான நோர்வே சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றில் இந்த வழக்குத் தொடரப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீறியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சமாதான முனைப்புக்களை ஊக்குவிப்பதற்கு உதவிகளை வழங்குவதாகத் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்ட போதிலும், நோர்வே குறித்த ஒப்பந்தத்தை உரிய முறையில் பின்பற்றத் தவறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய அரசாங்கம், நோர்வே அரசாங்கம் மற்றும் சகவாழ்வு மன்றம் ஆகியவற்றுக்கு இடையில் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. பிரித்தானிய அரசாங்கம் 25 வீத நிதி உதவிகளையும், நோர்வே அசராங்கம் 75 வீத உதவிகளையும் வழங்குவதாக இணங்கப்பட்டிருந்தது.

பிரித்தானிய அரசாங்கம் ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய நிதியை வழங்கியதாகவும், நோர்வே அரசாங்கம் யுத்தம் நிறைவடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக ஒப்பந்தத்தை இரத்துச் செய்து கொண்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு ராஜதந்திரிகள் விசேட வரப்பிரசாதங்களை உடையவர்கள் எனவும் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது எனவும் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவிதத்துள்ளது.

எனினும், கொழுமபு உயர் நீதிமன்றில் இராஜதந்திரிகளுக்கு எதிராக வழக்குத் தொடரக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வழக்குத் தொடர்ந்து நோர்வே தூதரக அதிகாரிகள் உயர் நீதிமன்றிற்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டால் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் பாரிய விரிசல் ஏற்படக் கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சகவாழ்வு மன்றத்தின் தலைவர் குமார் ரூபசிங்க மற்றும் அவரது நிறுவனம் நோர்வே அரசாங்கத்திடமிருந்து பாரியளவு நிதி உதவிகளை பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# பௌத்தத்தைப் பாதுகாக்க புதிய அமைப்பு உதயம்



(கொழும்பு)

பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு விசேட அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பௌத்த மஹாநாயக்க தேரர்களை உள்ளடக்கிய வகையில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மூன்று பீடங்களினதும் மஹாநாயக்க தேரர்களின் பங்களிப்புடன் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கண்டி தலதா மாளிகையில் நேற்றுமுன்தினம் இந்த அமைப்பு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. சிங்கள இனத்திற்கும் பௌத்த மதத்திற்கும் எதிரான சவால்களை முறியடிப்பதே இநத அமைப்பின் நோக்கமாகும்.

எதிர்காலத்தில் பௌத்தர்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டின் முக்கியமான பௌத்த மதத் தலைவர்கள் இந்த அமைப்பை வழிநடாத்துவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசியல் வாதிகளைக் கண்டால் வெறுப்படையும் பொதுமக்கள்

## கூறுகிறார் விக்டர் ஐவன்



(கொழும்பு) பொது மக்கள் அரசியல் வாதிகளை வெறுக்கும் மன நிலையில் உள்ளனர் என்று பிரபல பத்திரிகையாளர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

இதேவேளை மக்களின் இலட்சியம், மனபபாங்கு என்பவற்றில் மாற்றம் ஏற்படாதவிடத்து அரசியலமைப்புக்கான திருத்தம் எதுவும் சட்டத்தின் ஆட்சியை கொண்டு வராது என கல்வித் துறை சட்டநிபுணர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் திறந்த பல்கலைக்கழக் சிரேஷ்ட சட்ட விரிவுரையாளரான அசோக சில்வா, மக்கள் தமது மனப்பாங்கை மாற்றவேண்டும் எனவும் முக்கிய தேசியப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் மும்முரமாக உழைக்க வேண்டும் என்றார்.

பல மக்களுக்கு தமது உரிமைகள் பற்றி எதுவும் தெரிவதில்லை. அரசியலைப் பலரால் விவாதித்து விளங்க முடிவதில்லை. இங்கு தான் பிரச்சினையுள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் பதவி நீக்கப்பட்டமை தொடர்பில் கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. கொழும்புக்கு வெளியே இந்த பிரச்சினைப்பற்றி அக்கறை காட்டப்படவில்லை.

குற்றவியல் தண்டனை கோவை சட்டமூலம் கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது ஆணையின்றி 48 மணிநேரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் சந்தேக நபர் ஒருவரை விசாரிக்கும் அதிகாரத்தை பொலிஸுக்கு வழங்கியது. இது உண்மையில் அரசியலமைப்பின் ஷரத்துகளுக்கு முரணானது. ஆனால் இது பெரியளவில் கவனிக்கப்படவில்லை என்றார்.

இதேவேளை, பத்திரிகையாளர் விக்டர் ஐவன் தெரிவிக்கையில்,

நாம் அரசியல்வாதிகளை குற்றம்சாட்டி நாம் பழகி விட்டோம் மக்கள் அவர்களை வெறுக்கின்றனர். ஆனால் நாம் என்ன செய்துள்ளோம் என மீட்டுப் பார்த்து பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும் என்றார்.

# ஹமில்டன் கால்வாயை புனரமைக்கத் திட்டம்

(கொழும்பு)


மேல் மாகாணத்தில் மிகவும் மோசமாக மாசடைந்த நீர்வழிப் பாதையான ஹமில்டன் கால்வாயைப் புனரமைக்க அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது. இந்த அபிவிருத்தியின் முதல்படியாக இக்கால்வாயின் 8.7 கிலோ மீற்றர் நீளமான பகுதி புனரமைக்கப்படும்.

டச்சுக்காரர்கள் கட்டத் தொடங்கிய இந்த கால்வாயை ஆங்கிலேயர் 1802 ஆம் ஆண்டு கட்டி முடித்தனர். இது களனி கங்கையில் தொடங்கி நீர்கொழும்பு கடனீரேரியுடன் இணைந்து பின்னர் புத்தளம் கடனீரேரிவரை செல்கின்றது.

மா- ஓயாவிலிருந்து நீர் கொழும்பு கடனீரேரி வரையான 8.7 கிலோமீற்றர் கால்வாய் பகுதியை நிலமீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் புனரமைத்துள்ளது.

ஹமில்டன் கால்வாயின் எஞ்சிய 14 கிலோமீற்றர் நீளமான பகுதி பின்னர் புனரமைக்கப்படும். சகல கால்வாய்களையும் வாவிகளையும் சுத்தம் செய்வதனால் கால்வாய் வழிப் போககுவரத்தையும் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதுடன் மேல்மாகாணத்தில் காணப்படும் வாகன நெரிசலையும் குறைக்க முடியும் என்று அரசாங்கம் நம்புவதாக தெரிவிக்கின்றது.

# நீதிமன்றுக்கு அவதூறு; தடுக்க புதிய சட்டம்



(கொழும்பு)

நீதிமன்றத்தை அவதூறு செய்வதனைத் தடுக்கும் வகையில் புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்பட உள்ளதாக நீதி அமைசசர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார.

நீதிமன்றத்தை அவமரியாதை செய்வதனைத் தடுக்கும் நோக்கில் வரைவு சட்டமூலமொன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றத்தை அவமரியாதை செய்வது தொடர்பில் தற்போதைய சட்டங்களில் குறைபாடுகள் காணப்படுவதாகவும், அதனை நிவர்த்தி செய்யும் வகையில் புதிய் சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

உத்தேச வரைவு சட்டம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததன் பின்னர் நாடாளுமன்றில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்..

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# வரிச்சலுகை நிறுத்தம் வெளிநாட்டு முதலீட்டுக்கு ஆப்பு

(கொழும்பு)

மிதிவண்டிகளைத் தயாரிக்கும் இந்திய நிறுவனம் ஒன்று கொழும்பில் உள்ள தனது தொழிற்சாலையை மூடியுள்ளதாக அறிவித்துள்ளது.

பயர் பொக்ஸ் மிதிவண்டி நிறுவனமே இந்த முடிவை எடுத்துள்ளது. இலங்கையல் இயங்கி வந்த தமது தொழிற்சாலையை பங்களாதேசில் அமைக்கவுள்ளதாகவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்துடன் கொழும்பில் உற்பத்தியை நிறுத்திக் கொண்டுள்ளதாக பயர் பொக்ஸ் நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளர் சிவ் இந்தர் சிங் தெரிவித்துள்ளார்.

பயர் பொக்ஸ் நிறுவனத்தின் கொழும்பில் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் மிதி வண்டிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

மனிதஉரிமை மீறல் குற்றச்சாடடுகளை அடுத்து, கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அளித்து வந்த வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் இடை நிறுத்தியுள்ளது.

இதனால், தமது நிறுவனம் மேலதிகமாக 6.5 வீத தீர்வையை செலுத்த வேண்டியுள்ளதாக பயர் பொக்ஸ் நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளர் சிவ் இந்தர் சிங் தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனத்தின் கொழும்பு தொழிற்சாலையில் மாதம்தோறும் 25 ஆயிரம் மிதிவண்டிகள் தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

இந்த நிறுவனத்தினால் ஏற்றுமதி செய்யப்படும் மூன்று வகையான மிதிவண்டிகள், இந்திய ரூபாவில் 28,670 தொடக்கம் 38,640 ரூபா வரை பெறுமதியானவை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகை நீக்கப்பட்டதால், இலங்கையில் முதலீடு செய்துள்ள பல நிறுவனங்கள் தமது தொழிற்சாலைகளை மூடிவருவது குறிப்பிடத்தக்கது.

# கடவைகளுக்கு பாதுகாப்பு; உயிரிழப்புக்களை தவிர்க்க முயற்சி

(கொழும்பு)

தற்போது பாதுகாப்பற்ற நிலையிலுள்ள 500 புகையிரத கடவைகளுக்கு, புகையிரதக் கடவைகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் பி.ஏ.பீ. ஆரியரட்ன தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் ஏற்பட்ட விபத்துகளைக் கருத்திற்கொண்டு, இத்திட்டத்தை முன்னெடுக்குமாறு அமைச்சர் குமார வெல்கம அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது ஏராளமான நாடுகளில் பாதுகாப்பற்ற புகையிரதப் பாதைகளில், பாதுகாப்பு கடவைகள் பொருத்துவதற்கு முன்வந்துள்ள போதிலும், கேள்விக்கட்டளைகள் மூலம் பொருத்தமான நாடுகள் தெரிவு செய்யப்படவுள்ளன.

மணியொலியும் ஒளிச் சமிக்ஞை முறைமையும் தற்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், அதனை மேலும் விரிவுபடுத்துவதற்கு, இத்திட்டம் மூலம் வழியேற்படுமென ரயில்வே பொது முகாமையாளர் பி.ஏ.பீ. ஆரியரட்ன தெரிவித்துள்ளார்.

# அறநெறியை மக்களிடம் கட்டியெழுப்ப கரவெட்டியில் சைவ ஆலோசனை சபை

## பிரதேச செயலர் ச.சிவசிறி

(வடமராட்சி)

ஆன்மீகத்தையும் அறநெறியையும் கட்டியெழுப்புவதற்காக எங்களுடைய பிரதேசத்திலுள்ள சமயப்பற்றுள்ள பெரியார்களை ஒன்றிணைத்து சைவ ஆலோசனை சபை உருவாக்கப்பட்டுள்ளது என கரவெட்டி பிரதேச செயலக பிரதேச செயலாளரும் சைவ ஆலோசனைத்தலைவருமாகிய ச.சிவசிறி தெரிவித்துள்ளார்.


வடமராட்சி மேற்கு பிரதேச சைவ ஆலோசனைச் சபையின் சிவநெறி -03 இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் நெல்லியடி- தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் உள்ள திருமணமண்டபத்தில் நடைபெற்றது. இதில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இந்து சமயத்தில் உள்ள கிரியைகள், பல்வேறுபட்ட ஆகமங்கள், நாங்கள் கடைப்பிடிக்கின்ற சமய விதிமுறைகள் எனப் பல விடயங்களை உள்ளடக்கி மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக எமது பிரதேச சமயப் பேராசிரியர்கள், சமயப்பெரியார்கள், சமய அறிஞர்கள் ஒத்துழைப்புடன் சிவநெறியின் முதலாவது நூல் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து எங்களுடைய பிரதேசத்திலுள்ள ஆலயங்களை ஆவணப்படுத்தும் நோக்குடனும் எமது சமயத்தவர்களிடையே ஆன்மீக விழிப்புணர்வையும், அறநெறியை மேம்படுத்தும் நோககுடனும் இரண்டாவது நூல் வெளியிடப்பட்டது. அத்துடன் இந்த தற்கால தகவல் தொழில்நுட்ப உலகில் நவீன மாற்றங்களுக்கு ஏற்ப ஆலயங்களை ஆவணப்படுத்துகின்றதாக சிவநெறி- 3 வெளியிடப்பட்டுள்ளது. அந்தவகையில் வடமராட்சி மண்ணிலே இருக்கின்ற ஆலயங்களான மாலிசந்தை ஸ்ரீ வரதராஜர் விநாயகர் ஆலயம், அருள்மிகு உச்சில் புவனேஸ்வரி அம்மன் ஆலயம், நெல்லியடி -தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயம், வதிரி பூவக்கரை பிள்ளையார் ஆலயம், துன்னாலை அல்லையம் பதி ஸ்ரீ சுப்பிரமணியர்



அருள்மிகு தில்லையம்பல பிள்ளையார் ஆலயம், அருள்மிகு அத்துள் கண்ணகை அம்மன் ஆலயம், எள்ளங்குளம் ஆதிபராசக்தி ஆலயம் என இவ்வாறு ஆலயத்தின் வழிபாட்டுமுறைகள் ஆலயத்தின் அமைப்பு முறைகள் ஆலயத்தினால் நடாத்தப்படும் வருடாந்த திருவிழாக்கள் ஆகியவற்றை உள்ளடக்கி இவற்றை சிறந்த முறையிலே ஒலிப்பதிவு செய்துள்ளோம்.

வரலாற்றுப்பதிவுக்காக சிறந்த பின்னணிக்குரல்களையும் வழங்கி இந்த இறுவட்டு வெளியிடப்பட்டுள்ளது என்றார்.



கிளிநொச்சியிலிருந்து முழங்காவில் செல்லும் பிரதான வீதியிலுள்ள கோணாவில் குளத்தின் மேலதிகநீர், வீதியை கடக்கும் பகுதியை படங்களில் காணலாம். மிகவும் மோசமான நிலையில் உள்ள இந்தப் பகுதியை புனரமைக்குமாறு மக்கள் கோருகின்றனர். (09)

# அனுமதியின்றி மட்டைச்சிங்கிறால் பிடித்த மூவருக்கு நீதிமன்றத்தால் தண்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பரப்பில் அனுமதிப்பத்திரமின்றி மட்டைச்சிங்கிறால் பிடித்த மூவருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றம் 9ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன்; 54 ஆயிரம் ரூபா பெறுமதியான மட்டைச்சிங்கிறால்களையும் பறிமுதல் செய்து அழிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கடற்பரப்பில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் மூன்று கடற்தொழிலாளர்கள் மட்டைச்சிங்கிறால் பிடிப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து அப்பகுதிக்கு விரைந்த கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் அப்பகுதியில் ஆறு பெட்டிகளுடன் 90 கிலோநிறையுடைய சிங்கிறால்களுடன் காணப்பட்ட மூன்று கடற் தொழிலாளர்களைப் பிடித்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் அவர்களுக்கெதிராக வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் சிறிநிதி நந்தசேனன் குறித்த மூவருக்கும் தலா 3000 ரூபா வீதம் 9 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், இவர்கள் பிடித்து வைத்திருந்த சிங்கிறால்களையும் பறிமுதல் செய்து அழிக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும் மட்டைச்சிங்கிறால் அனுமதியின்றி பிடிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பதுடன், பெப்ரவரி மாதத்தில் அனுமதிப்பத்திரம் இருந்தாலும் அதனைப்பிடிக்க முடியாது என்பது இந்த அனுமதியில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. ஏனெனில் இந்தக்காலப்பகுதியில் அவை இனப்பெருக்கம் செய்யும் காலம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# முரசின் இன்றைய பலன்

(10.02.2013 – ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 28 ஆம் திகதி. நட்சத்திரம் அவிட்டம். மரணம் பின்னிரவு 05.24 வரை. திதி அமாவசை பிற்பகல் 01.45 வரை. இராகுகாலம் 05.04 - 06.34 வரை. சுபநேரம் 09.34 - 11.04 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தடைகளைத் தகர்ப்பீர்கள். உற்சாகமான நாள். பணவரவால் வீட்டில் மகிழ்ச்சி. சொத்து வாங்க யோகம். விருந்தும் கொண்டாட்டமும் இருக்கும். தாய்வழி உறவினரின் உதவி. வெற்றி. |
| ரிஷபம் | அடுத்தவர் விவகாரத்தில் நுழைய வேண்டாம்.. கழன உழைப்பால் தொழில் சீராகும். செலவு அதிகரிக்கும். பிறருக்கு உதவுவீர்கள். சிகிச்சை. பகையறிந்து விலகுதல் நன்மை. |
| மிதுனம் | பேச்சு, செயலில் புத்திசாதுர்யம் நிறைந்திருக்கும். தொடங்கும் வேலை எளிதாக நிறைவேறும். வளர்ச்சி மன மகிழ்வைத் தரும். உபரி வருமானம். எல்லோர்க்கும் உதவுவீர்கள். |
| கடகம் | செயல்களில் நேர்த்தி. தன்னம்பிக்கையும், பெருமிதமும். தொழிலில் சிரத்தை. கடன் தீரும். வாங்க நினைத்ததை வாங்குவீர்கள். நண்பருக்கு உதவி. எண்ணத்தில் தெளிவு. |
| சிம்மம் | சிலரது பேச்சு சங்கடப்படுத்தலாம். வேலைச்சுமை குறையும். சராசரி பணவரவு. நண்பர் கொண்டாடுவர். உடல்நலம் சிறக்கும். வெளியூர் பயண வாய்ப்பு. மாணவர்க்கு உயர்ச்சி. |
| கன்னி | தொழிலில் இடர்விலகும். பொறுமையால் வெல்வீர். பணவரவும், நன்மையும் கூடும். வழக்கு வெற்றி. நட்பினால் உயர்வு. சோதனையில் தேர்ச்சி. எதிர்கால சிந்தனை. |
| துலாம் | தொழில் போட்டி அதிகரிக்கும். சிலர் தொல்லை தருவர். பேச்சில் நிதானம் அவசியம். பணவரவு சுமார். பூர்வ சொத்துக்களால் வருமானம். வீண் கௌரவ செலவு. உறவு வரவு. |
| விருச்சிகம் | திட்டமிட்டவை நிறைவேறும். நெகிழ்ச்சியடையும் நாள். தொழில் வளர்ச்சி. உபரி வருமானம். இல்லறத் துணை விரும்பியது செய்வீர்கள். வெளியூரிலிருந்து நற்செய்தி. அமைதி. |
| தனுசு | மனதில் கலை உணர்வு. அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வீர்கள். தொழில் அபிவிருத்தி. உபரி வருமானம். பழைய விவகாரத்தில் நல்ல தீர்வு. பொன் பொருள் சேர்க்கை. |
| மகரம் | மறதியால் தர்மசங்கடமான சூழல்கள். அன்றாடப் பணியில் மாற்றம். பொறுப்பாக் நடந்தால் நன்மை. வரவு தாமதமாகும். நண்பருடன் பழைய நினைவு பகிர்வு. சுபகாரியச் செலவு. |
| கும்பம் | பொறுமையும் நிதானமும் சிரமம் தவிர்க்கும். கடும் உழைப்பு. தொழில், இலக்கை எய்தும். எதிர்பார்த்த பணவரவு. செலவும் வரும். வெளியூர்ப் பயணம். பிள்ளைகளால் கௌரவம். |
| மீனம் | நற்செயல்களால் பெருமை பெறுவீர்கள். பேச்சில் சாந்தமும், இனிமையும். சம்பளம், பதவி உயர வாய்ப்பு. உறவினர் நண்பர் மத்தியில் செல்வாக்கு. குடும்ப ஒற்றுமை, மகிழ்ச்சி. |

# இலங்கைத் தமிழரின் வீட்டில் ஜேர்மனியில் பெரும் திருட்டு

(திருநெல்வேலி)

ஜேர்மன் நாட்டில் பல வருடங்களாக தமது குடும்பத்தினருடன் வசித்து வரும் இலங்கைத் தமிழர் ஒருவரின் வீட்டில் திருட்டு இடம் பெற்றுள்ளது. கடந்த மாதம் 20ஆம் திகதி இச்சம்பவம் நடைபெற்றது.

பொங்கல் விழா ஒன்றில் கலந்து கொள்வதற்காக குடும்பத்தவர்கள் அனைவரும் பேர்லின் நகரை அண்டிய பகுதியொன்றுக்கு சென்றிருந்தனர். வீட்டில் எவரும் இல்லை எனத் தெரிந்து கொண்ட திருடர்கள், வீட்டின் ஜன்னல் கதவுகளை உடைத்து உள்ளே சென்று சல்லடை போட்டுத்தேடி 17 பவுண்தங்க நகைகள், சுமார் 700 யூரோ பணம், 3 லப்டொப்கள் மற்றும் சில பொருட்களைக் களவாடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

மாலை 4.00 மணிக்கும் இரவு 8.00 மணிக்கும் இடையே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது. இரவு வீடு திரும்பிய வீட்டுக்காரர் வீட்டின் உள்ளே வெளிச்சம் எரிந்து கொண்டிருப்பதையும், ஜன்னல் உடைக்கப்பட்டு நகைகள், பணம் மற்றும் பொருட்கள் களவாடப்பட்டிருந்தமையையும் கண்டு அதிர்ச்சியுற்றனர். இதுபற்றி ஜேர்மன் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்ததுடன் விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டை சேர்ந்த பொன்னையா செல்வராஜா என்பவரின் ஜேர்மனியில் உள்ள பேர்லின் நகரையண்டிய வீட்டிலிருந்தே நகைகளும், பணமும், பொருட்களும் களவாடப்பட்டன.

இக்குடும்பத்தவரின் மகளின் தங்க நகைகள் ஜேர்மன் வங்கியில் வைக்கப்பட்டிருந்ததால் அவைகள் தப்பியுள்ளன. அத்துடன் குடும்பத்தவரின் மனைவி தனது தாலிக் கொடியை விழாவுக்கு அணிந்து சென்றதினால் தாலிக் கொடி காப்பாற்றப்பட்டுள்ளது. (137)

## வடமராட்சியில் ரோலர் மீன்பிடி; குற்றவாளிக்கு நீதிமன்றம் தண்டம்

2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் திகதி வடமராட்சிக் கடற்பரப்பில் இழுவைமடியைப் பயன்படுத்த தடைசெய்யப்பட்ட ரோலர் மீன்பிடியை மேற்கொண்டதான வழக்கில் குற்றவாளிக்கு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், அவர் பயன்படுத்திய தடைசெய்யப்பட்ட உபகரணங்களையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது.

யாழ். கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு விசாரணை ஏழுதவணைகள் கடந்த நிலையில், நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதாக யாழ் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்கை விசாரித்து அதற்கான தீர்ப்பினை வழங்கிய பருத்தித்துறை நீதவான் சிறிநிதிநந்தசேனன் குற்றவாளிக்கு 5000 ரூபா தண்டம் விதித்தார். அவர் பயன்படுத்திய சட்ட விரோத ரோலர் மடிஉட்பட தடை செய்யப்பட்ட உபகரணங்களையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். (பா)

## 13 வருடங்களின் பின் இறுதியில் நைஜீரியா



ஆபிரிக்கக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு 13 வருடங்களின் பின்னர் நைஜீரிய அணி தகுதி பெற்றுள்ளது.

அரையிறுதிப் போட்டியில் மாலி அணியை 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டதன் மூலம் நைஜீரியா இந்த வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டது.

போட்டியின் முதல் பாதியில் 3-0 என்ற கோல்கள் கணக்கில் நைஜீரியா முன்னிலை பெற்றிருந்தது.

போட்டியின் இரண்டாம் பாதியில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் போட்டன.

இதன்பிரகாரம், போட்டியின் இறுதியில் 4-1 என்ற ஆட்டக்கணக்கில் வெற்றிபெற்ற நைஜீரிய அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதேவேளை, மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் பலம்வாய்ந்த கானா அணியை, வெற்றிகொண்ட புர்கினா பசோ இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

போட்டியின் முழு நேர நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலை போட்டிருந்த நிலையில், தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதன்பிரகாரம், 3-2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்ற புர்கினா பசோ அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

## வென்றது ஆர்ஜென்ரீனா

(ஸ்டாக்ஹோம்)

சுவீடன் அணிக்கு எதிரான நட்பு கால்பந்து போட்டியில், ஆர்ஜென்ரீன அணி வெற்றி பெற்றது.

சுவீடனில் உள்ள ஸ்டாக்ஹோம் நகரில், ஆர்ஜென்ரீனா - சுவீடன் அணிகள் நட்பு ரீதியிலான கால்பந்து போட்டியில் மோதின. ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில், சுவீடன் வீரர் மிக்கேல் லஸ்டிக், சேம் சைட் கோல் அடித்தார். பின், 18ஆவது நிமிடத்தில் சுவீடனின் ஜோனஸ் ஆல்சன் கோல் அடித்து 1-1 என சமன் செய்தார். உடனடியாக எழுச்சி கண்ட ஆர்ஜென்ரீனா அணிக்கு செர்ஜியோ அகுயிரோ (19ஆவது நிமிடம்), கான்சலோ ஹிகுயன் (22ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். முதல் பாதி முடிவில் ஆர்ஜென்ரீனா அணி 3-1 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் போராடிய சுவீடன் அணிக்கு ஸ்டாபேஜ் (90.5 நிமிடத்தில்), ராஸ்மஸ் எல்ம் ஒரு கோல் அடித்தார். ஆட்டநேர முடிவில் ஆர்ஜென்ரீனா அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## இங்கிலாந்து அபார வெற்றி



(ஒக்லண்ட்)

நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 40 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் முதலாது ஆட்டம் நேற்று நியூசிலாந்தின் ஒக்லண்ட்டில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இங்கிலாந்து அணி, இயன் மோர்கன், ரைற், பிறைஸ்ரன் பட்லர் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றறது. இறுதியில் இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இயன் மோர்கன் 26 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 46, ரைற் 20 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 42, பிறைஸ்ரன் 22 பந்துகளில் 38, பட்லர் 15 பந்துகளில் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரி, எலிஸ், பௌல்ட் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 215 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி, புறொட், ஸ்ரீபன் பின் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் குப்ரில், மன்ரோ, ஹரி ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெறமுடிந்ததே தவிர போட்டியை வெல்ல முடியவில்லை. இறுதியில் நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்று 40 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் குப்ரில் 44, மன்ரோ 28, ஹரி ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கப்டன் புறொட் நான்கு, ஸ்ரீபன் பின் மூன்று, ரைற் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இதே வேளை, இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி நாளை மறுதினம் ஹமில்டனில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் அசத்துவேன்



இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பான முறையில் செயற்பட்டு அணியின் வெற்றிக்குப் பங்காற்றுவேன் என அவுஸ்ரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் நதன் லயன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள ஆடுகளத்தன்மை, சீதோஷ்ண நிலை வித்தியாசமானது. இது எங்கள் அனைவருக்கும் மிகப்பெரிய சவாலாகும். அண்மையில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்டில் இந்திய அணி 4 சுழற்பந்து வீச்சாளர்களுடன் விளையாடியதைப் பார்த்தோம். எனவே அவுஸ்ரேலிய அணியில் 2 சுழற்பந்து வீச்சாளர்கள் களம் இறங்க வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன். இந்திய-இங்கிலாந்துடெஸ்ட் தொடரின்போது இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர்கள் மொன்டி பனேசர், ஸ்வானின் பந்து வீச்சை பார்த்தேன். இருவரும் சிறப்பாக பந்து வீசினர். குறிப்பாக ஸ்வானின் பந்து வீச்சை மிக உன்னிப்பாக கவனித்தேன். இதில் இருந்து சில விடயங்களை எடுத்துக் கொண்டுள்ளேன். அந்த யுக்தியை இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்துவேன். இந்த தொடருக்கான அவுஸ்ரேலிய அணியில் நான், ஸ்டீவன் ஸ்மித், டோஹர்த்தி, கிளைன் மைக்ஸ்வெல் ஆகிய 4 சுழற்பந்து வீச்சாளர்கள் இடம் பெற்றிருப்பது நல்ல விடயமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரையிறுதியில் நடால்



(வினா டெல் மார்)

சிலி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு, ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் முன்னேறினார்.

சிலியில் ஏ.டி.பி. ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் ஒற்றையர் பிரிவு காலிறுதியில், ஸ்பெயின் வீரர் ரபெல் நடால், சகநாட்டைச் சேர்ந்த டேனியல் ஜிமினோ-டிராவர் மோதினர். இதில் அபாரமாக ஆடிய நடால், 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்கில் மிகச் சுலபமாக வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறினார். அரையிறுதியில் நடால், பிரான்ஸ் வீரர் ஜெரிமி சார்டியை எதிர்கொள்ளவுள்ளார்.

## ஒப்பந்தம் நீடிப்பு






(மட்ரிட்)

ஆர்ஜென்ரீனா கால்பந்து வீரர் மெஸ்சியின், பார்சிலோனா. கிளப் அணியுடனான ஒப்பந்தம் எதிர்வரும் 2018ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி (வயது- 25). இவர் கிளப் அணிகளுக்கு இடையிலான போட்டியில், பார்சிலோனா அணிக்காக தனது 13ஆவது வயதில் இருந்து விளையாடி வருகிறார். மெஸ்சி கடந்த மாதம் பார்சிலோனா அணியுடனான ஒப்பந்தத்தை வரும் 2016ஆம் ஆண்டு வரை நீடித்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் மேலும் இரண்டு ஆண்டுகள், அதாவது ஜூன் 2018ஆம் ஆண்டு வரை ஒப்பந்தத்தை நீடித்துள்ளார். லா லிகா, சம்பியன்ஸ் லீக் உள்ளிட்ட கிளப் அணிகள் பங்கேற்கும் போட்டிகளில், பார்சிலோனா அணிக்காக அதிக கோல் அடித்த வீரர்கள் வரிசையில் முன்னிலை வகிக்கிறார் மெஸ்சி. இதுவரை இவர், 289 கோல் அடித்துள்ளார். கடந்த ஆண்டு சிறப்பாக செயற்பட்ட இவர், ஒரு ஆண்டில் (2012) அதிக கோல் அடித்த வீரர்கள் வரிசையில் முதலிடம் பிடித்தார். இவர், கடந்த ஆண்டு 91 கோல் அடித்தார். இதன்மூலம் ஜேர்மனியின் முன்னாள் வீரர் ஜெர்ட் முல்லரின் சாதனையை முறியடித்தார். இவர், 1972இல் அதிகபட்சமாக 85 கோல் அடித்தார்.

## இறுதியில் இன்று கே.சி.சி.சி., ஜொலிஸ்ரார் பலப்பரீட்சை




கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இவ் இறுதிப் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதவுள்ளது. இறுதிப் போட்டி 40 ஓவர்களைக் கொண்ட ஆட்டமாக இடம்பெறவுள்ளதாகவும், இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ஞானகாந்தன், சிறப்பு விருந்தினராக ஸ்ரான்லிக் கல்லூரி அதிபர் இங்கோ ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி., 54)

## சதுரங்கப் போட்டி வெளியானது வென்றோர் விபரம்

(தும்பளை)

தும்பளை மேற்கு விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வயது அடிப்படையில் நடத்தப்பட்ட இச்சதுரங்கப் போட்டி கடந்த 4ஆம் திகதி விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தில் நடைபெற்றது. இதில் 13 வயதுக்குட்பட்டோர் பிரிவில் முதலாமிடத்தை சி. லக்சிகா, பி. ஜோதினி, கி. யசோராஜ் ஆகியோரும், 16 வயதுக்குட்பட்டோர் பிரிவில் முதலாமிடத்தை பி. ஜோய்சன், இரண்டாமிடத்தை ச. மிதுஷன், மூன்றாமிடத்தை சி. சுவர்ணன் ஆகியோரும் பிடித்துக்கொண்டனர்.

இதேவேளை, வயதுக்கட்டுப்பாடற்ற திறந்த போட்டி விரைவில் நடத்தப்படும் எனவும், வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்கள் கழகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின்போது வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (62)

## வென்றது அரியாலை ஐக்கியம்

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அரியாலை ஐக்கிய பச்சை அணி வெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் ஆனைக் கோட்டை யூனியன் அணியினை எதிர்த்து அரி யாலை ஐக்கிய பச்சை அணி மோதியது. ஆனைக்கோட்டை அணிக்கு சவால்விடும் வகையில் விளையாடிய அரியாலை ஐக்கிய பச்சை அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.




## வலைப்பயிற்சி திடல் அமைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வல்வெட்டித்துறை கழுகுகள், ஸ்கந்தா ஸ்டார்ஸ் ஆகியவற்றின் மைதானங்களில் கிரிக்கெட் வலைப் பயிற்சித்திடல் அமைப்பது என யாழ்ப்பாண கிரிக்கெட் சங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் உபதலைவரும், வடக்கு-கிழக்கு மாகாண கிரிக்கெட் அபிவிருத்திக் குழுத் தலைவரும் ஈஸ்ட் வெஸ்ட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருமாகிய மதிவாணனால் ரூபா 5 இலட்சம் நிதி யாழ்ப்பாணத் துடுப்பாட்டச் சங்கத்திற்கு வழங்கப்பட்டது.

இந்நிதியின் மூலம் கிரிக்கெட் வலைப்பயிற்சித் திடல் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி வல்வெட்டித்துறை கழுகுகள் மற்றும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகியவற்றில் கிரிக்கெட் வலைப்பயிற்சி திடல் அமைக்கும் பணிகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண கிரிக்கெட் சங்கச் செயலாளர் எஸ்.விமலதாஸன் தெரிவித்தார்.

## நெடியகாடு இளைஞர் வி.க.வின் நிர்வாகத் தெரிவு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை-நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த 23ஆம் திகதி கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் தலைவராக கே.என். தேவதாஸ்,செயலாளராக இ. பகீரதன், உப தலைவராக நா. யோகீஸ்வரராஜா, உப செயலாளராக ச. விஸ்வரூபன், பொருளாளராக ச. பிரதீபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக உறுப்பினர்களாக இ. சண்முகதாஸ், தி. கருணைநாதன், சி. மதுசூதனன், உ. நிஷாந்தன், இ.ஆனந், பா. ஸ்ரீகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் கழக காப்பாளர்களாக சூ.சே. குலநாயகம், வை. சோமசுந்தரம், கணக்காய்வாளராக இ. இராதாகிருஷ்ணன் ஆகியோர் தெரிவானார்கள்.

## இல்ல மெய்வல்லுநர்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஹாட்லிக் கல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் அ.த. அரியகுமார் சாள்ஸ் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீதரன், சிறப்பு விருந்தினராக ஹாட்லிக் கல்லூரி பகுதித் தலைவர் சி. தவராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (109)

***

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.வித்தியாலய அதிபர் அ. இரங்கநாதன்தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சண்முககுலகுமாரன் கலந்துகொள்ளவுள்ளார்.

***


காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.00 மணிக்கு கல்லூரி அதிபர் வே. முருகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி. யோன் குயின்ரஸ் கலந்துகொள்ளவுள்ளார். (50)

***

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.வித்தியாலய அதிபர் ச. வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சண். தயாளன் கலந்துகொள்ளவுள்ளார்.

## ஒட்டுசுட்டானில் திறக்கப்பட்டது வடக்கின் கிரிக்கெட் அக்கடமி





(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டானில் அமையப் பெற்ற வடக்கின் கிரிக்கெட் அக்கடமி திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண வீரர்களின் கிரிக்கெட் தரத்தை மேலும் வளர்த்துக்கொள்ளும் வகையிலும், தென்னிலங்கை பயிற்றுவிப்பாளர்களுடன் ஒரு இணைப்பை ஏற்படுத்தி கிரிக்கெட் வீரர்களின் ஆட்டத்திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையிலும் வடக்கின் கிரிக்கெட் அக்கடமி தோற்றுவிக்கப்பட்டது.

கடந்த 27ஆம் திகதி ஒட்டுசுட்டானில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கின் கிரிக்கெட் அக்கடமியின் கொடி மற்றும் அக்கடமி முத்திரைகளை முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் மு. தினேஸ்குமார் திறந்து, வெளியிட்டு வைக்க, வலைப்பயிற்சி மைதானங்களை வடக்கு மாகாண கிரிக்கெட் பயிற்றுநர் ரவீந்திர புஸ்பகுமார் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து வருகை தந்த கொழும்பு கங்காரு கிரிக்கெட் அக்கடமி அணிக்கும் வடமாகாண பயிற்றுநர் அணிக்குமிடையிலான ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டி ஒன்று இடம்பெற்றது. இதில் இப்போட்டியில் வடமாகாண பயிற்றுநர் அணி வெற்றிபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் சு. ரவிந்திரபுஸ்பகுமார், முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் மு. தினேஸ்குமார், ஒட்டுசுட்டானில் அமைந்திருக்கும் 64ஆவது படையணிப் பிரிகேடியர் கேணல் பற்றிக், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பயிற்றுநர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சிமையத்தின் மூலம் வடக்குமாகாண வீரர்கள் கிரிக்கெட் தரத்தை மேலும் வளர்த்துக் கொள்வதுடன், தேசிய அணியில் இடம்பிடிக்கும் வாய்ப்பையும் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இலைமறை காயாகவுள்ள வடக்கு மாகாண வீரர்கள் இப்பயிற்சி மையத்தை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி கிரிக்கெட் அறிவை மேலும் வளர்த்துக்கொள்ளவேண்டும் எனவும் அக்கடமி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் இவ்வாறானதொரு அக்கடமி அமைவது மகிழ்ச்சிக்குரியது என விளையாட்டு ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# சுற்றுப் பயணங்களே கூட்டமைப்பின் பிரதான அரசியல் வேலைத்திட்டம்?



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தென்னாபிரிக்க விஜயத்தின் நோக்கம் என்னவாக இருக்கக்கூடும்? இது பற்றி ஏசியன்ட்ரிபியூன் (Asiantribune.com) இணையத்தள ஆசிரியர் கே.ரி. ராஜசிங்கத்திற்கு வழங்கிய தொலை பேசி நேர்காணலில், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தென்னாபிரிக்க அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே நாங்கள் செல்கின்றோம், அவர்கள் முரண்பாட்டுத் தீர்வு மற்றும் மீளிணக்கம் தொடர்பான தங்களது அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளனர் என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஏற்கனவே தென்னாபிரிக்க அழைப்பின் பேரில் அரசாங்க பிரதிநிதிகள் குழுவொன்று அங்கு சென்று திரும்பியிருக்கின்ற சூழலிலேயே தாங்கள் அழைக்கப்பட்டிருப்பதாகவும் சம்பந்தன் குறிப்பிட்டிருக்கின்றார். எனவே சம்பந்தனின் மேற்படி கூற்றிலிருந்து ஒரு விடயம் வெள்ளிடைமலை. அதாவது மேற்படி தென்னாபிரிக்க தலையீடு அரசாங்கத்தின் விருப்பத்தின் பேரிலேயே இடம்பெறுகிறது. அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான அரச குழுவொன்று ஏற்கனவே அங்கு சென்று திரும்பியிருக்கிறது.

இது தொடர்பில் முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் ஆலோசகநிலைத் தலைவராகவும் கருதப்படுகின்ற எம்.ஏ.சுமந்திரன், தென்னாபிரிக்க அனுபவங்களிலிருந்து தாம் கற்றுக் கொள்ளவுள்ளதாக குறிப்பிட்டிருந்ததும் இந்த இடத்தில் நினைவுகொள்ளத் தக்கது. இங்கு ஒரு கேள்வி எழுகிறது - தென்னாபிரிக்க அனுபவங்களிலிருந்து தமிழர்கள் எதைக் கற்றுக் கொள்ள முடியும்? இலங்கையின் இனமுரண்பாட்டு அனுபவங்களுக்கும், தென்னாபிரிக்க அனுபவங்களுக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடுண்டு. இலங்கையின் பிரச்சினை, நாட்டின் சிறுபான்மை தேசிய இனமான தமிழர்கள், நாட்டின் பெரும்பான்மை தேசிய இனமான சிங்களவர்களிடமிருந்து உரிமைகளை கோருகின்றனர். தங்களது தனித்துவத்தை பேணிக் கொண்டு வாழும் வகையிலான அதிகாரப் பகிர்வை கோருகின்றனர். ஆனால் தென்னாபிரிக்க அனுபவம் இதற்கு முற்றிலும் மாறான ஒன்று. தலைகீழான ஒன்று எனலாம். தென்னாபிரிக்காவின் பெரும்பான்மையினராகிய கறுப்பின மக்கள் சிறுபான்மையினராகிய வெள்ளையின மக்களிடமிருந்து உரிமையைக் கோரினர். இறுதியில் அவர்கள் வெற்றியும் பெற்றனர்.

இந்த காலகட்டத்திலேயே பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக தென்னாபிரிக்காவில் உண்மைக்கும் மீளிணக்கத்திற்குமான ஆணைக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டிலிருந்து 1994ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் வெள்ளையின சிறுபான்மை ஆட்சியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை பரிசீலித்த இவ் ஆணைக்குழு, தனது அறிக்கையை ஐந்து பாகங்களாக வெளியிட்டிருந்தது. இவ்வாறு முற்றிலும் மாறுபட்டதொரு பின்புலத்தில், கையாளப்பட்ட இணக்கப்பாட்டு பொறிமுறை ஒன்றிலிருந்தே தற்போது கூட்டமைப்பினர் கற்றுக்கொள்ள முற்பட்டிருக்கின்றனர் அல்லது கற்றுக் கொள்ள உள்ளதாக மக்களுக்குச் சொல்லுகின்றனர்.

இதனை பிறிதொரு வகையிலும் பார்க்கும் அபிப்பிராயங்களும் உண்டு. தென்னாபிரிக்கா சமீபகாலமாக இலங்கையில் காட்டிவரும் வர்த்தக ஈடுபாடுகளின் விளைவாகவே இலங்கை அரசியல் மீதும் ஈடுபாடு காட்டியிருக்கலாமென சில அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். இத்தகைய கருத்துக்களை இலகுவில் புறம் தள்ளிவிடவும் முடியாது. யுத்தம் நிறைவுபெற்றிருந்த சூழலில், தென்னாபிரிக்காவின் முன்னணி சுற்றுலா நிறுவனமான சண் உல்லாச விடுதி குழுமம் (Hotels group Sun International Ltd) சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான முதலீட்டு நடவடிக்கை ஒன்றிற்கு இணங்கியிருந்தது. கொழும்பிற்கு 15 கி.மீ. தொலைவிலுள்ள கந்தானையில் 200 ஹெக்டயர் நிலப்பரப்பில் உல்லாச விடுதி நகரமொன்றை ஸ்தாபிக்கும் முயற்சியில் மேற்படி சண் குழுமம் ஈடுபட்டுள்ளது.

இது தவிர, தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸின் உயர் வர்த்தக குழுவினர் செப்டம்பர் 2012இல் இலங்கைக்கு, தென்னாபிரிக்க பிரதி பொருளாதார அமைச்சர் பேராசிரியர் கெலிங்வே மிகைசி தலைமையில் வருகை தந்திருந்தனர். மேற்படி வர்த்தக சம்மேளனம் சுமார் 6000 வர்த்தக நிறுவனங்களை உறுப்பினராகக் கொண்டிருக்கிறது. எனவே இவ்வாறு தென்னாபிரிக்கா இலங்கையின் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டிவருகின்ற ஒரு பின்புலத்தில்தான், இலங்கை அரசியல் முரண்பாட்டின் மீதும் தனது அவதானத்தை செலுத்தியிருக்கிறது.

பலமானதொரு அரசாங்கத்தை எதிர்நோக்க வேண்டிய பொறுப்பில் இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இவற்றை எவ்வாறு கையாளப் போகிறது? அதற்காக கூட்டமைப்பிடம் இருக்கும் வேலைத்திட்டம் என்ன? இப்படியான கேள்விகளுக்கு பதிலிறுப்பதை எப்போதுமே புத்திசாதுர்யமாக தவிர்த்துக் கொள்ளும் கூட்டமைப்பின் தலைவர்கள், நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்வதையே தங்களது பிரதான அரசியல் வேலைத்திட்டமாக காண்பித்து வருகின்றனர். கூட்டமைப்பின் மேற்படி தென்னாபிரிக்க விஜயத்தின் பின்னணியில் சில சர்வதேச நிறுவனங்களும் தொடர்புபட்டிருக்கின்றன. குறிப்பாக ஜேர்மனியை தளமாகக் கொண்டிருக்கும் பேர்கொவ் நிதியம், கொழும்பிலிருந்து இயங்கும் வெரிட் ஆய்வுக் குழு போன்ற அமைப்புக்களும் கூட்டமைப்பின் சமீபகால அணுகுமுறைகளின் பின்னணியில் இயங்குகின்றன. தென்னாபிரிக்காவிற்கு செல்வதற்கு முன்னர், கூட்டமைப்பின் ஒரு குழுவினர் ஜேர்மனிக்கு சென்றிருந்தது மேற்படி பேர்கொவ் நிதியத்தின் அழைப்பின் பேரிலாகும்.


தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் அரசியல் தலைமையாக வெளித்தெரிந்ததன் பின்னர், இவ்வாறான அமைப்புக்களின் தலையீடுகளும் அதிகரித்திருக்கின்றன. கூட்டமைப்பு ஒரு ஜனநாயக அரசியல் தலைமை என்னும் வகையில், பல்வேறு தரப்பினருடன் உரையாடுவதும் அவர்களது கருத்துக்களை செவிமடுப்பதும் தவறான ஒரு விடயமல்ல. ஆனால் கூட்டமைப்பின் செயற்பாடுகள் பெரும்பாலும் மூ[illegible] அறை விடயங்களாகவே இருக்கின்றன ஆகக் குறைந்தது, கூட்டமைப்பில் உள்ளவர்களுக்கே பெரும்பாலான விடயங்கள் பகிரப்படுவதில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் தென்னாபிரிக்க விடயமும், கூட்டமைப்பால் நன்கு திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்ட ஒன்றல்ல என்பது வெள்ளிடைமலை. இவ்வாறு கூட்டமைப்பால் திட்டமிடப்படாது முன்னெடுக்கப்படும் சர்வதேச அணுகுமுறைகள், மற்றவர்களால் முன்வைக்கப்படும் வேலைத்திட்டங்களை அமுல்ப்படுத்தும் ஒரு நிலையையே தோற்றுவிக்கும். இங்கு கூட்டமைப்பு ஒரு மக்கள் தலைமை என்பதற்கு மாறாக சர்வதேச நிறுவனங்களுக்கான ஒரு தரகு அமைப்பாகவே தொழிற்பட நேரிடும். கூட்டமைப்பின் சமீபகால அணுகுமுறைகளை அவதானிக்கு[illegible] போது இவ்விடயமே துருத்திக் கொண்டு தெரிகிறது.

---

# ஜெனிவாவில் இந்தியா என்ன செய்யும்?

- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

இலங்கை அரசாங்கம் தொடர்பாக அமெரிக்கா இந்த முறையும் மனித உரிமைப் பேரவையில் விசேட பிரேரணையொன்றை முன்வைக்கவிருக்கிறது. அமெரிக்க அரசாங்கத்தில் உள்ளவர்களைத் தவிர வேறொருவருக்கும் பிரேரணையில் என்ன வரப் போகிறது என்று இன்னமும் தெரியாது. ஆனால்



இப்போதே பலர் அதனை ஆதரிக்கவும் பலர் அதனை எதிர்க்கவும் தயாராகிவிட்டார்கள். கடந்த முறையும் இதுதான் நடைபெற்றது. எடுத்த எடுப்பிலேயே எல்லோரும் தாம் விரும்பியவாறு பிரேரணையை ஆதரிக்கவும் எதிர்க்கவும் முனைந்தனர்.

இந்தியா இந்த பிரேரணை விடயத்தில் என்ன முடிவு எடுக்கும் என்பது பலரது கேள்வியாகவிருக்கிறது. இந்தியா இலங்கையின் நெருங்கிய நட்பு நாடு என்பதாலும் இந்தப் பிரேரணை இலங்கையின் இனப் பிரச்சினையோடு நெருங்கிய தொடர்புடையதாக கருதப்படுவதாலும் இந்தியாவும் அந்த இனப்பிரச்சினை விடயத்தில் அக்கறை கொண்டுள்ளதாக கருதப்படுவதாலுமே இந்திய நிலைப்பாட்டை பலர் கூர்ந்து கவனித்து வருகிறார்கள்.

உண்மையிலேயே அமெரிக்கா கடந்த முறை பிரேரணையை கொண்டு வந்தபோது ஆரம்பத்தில் இந்தியா அதனை ஆதரிக்க விரும்பவில்லை. ஏனெனில் மனித உரிமை என்று வரும் போது காஷ்மீரில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்திய அரசாங்கமும் குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது.

ஆனால் உண்மையில் கடந்த வருடம் கொண்டு வரப்பட்ட பிரேரணை இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு வகையில் சாதகமாகவே அமைந்திருந்தது. இலங்கையில் இறுதிக்கட்ட போரின் போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேசவிசாரணை நடத்தப்பட வேண்டும் என்றே அந்தப் பிரேரணை கொண்டு வரப்படு முன் சர்வதேச சமூகமும் இலங்கை மற்றும் இந்தியாவிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளும் கோரி வந்தன.

கடந்த வருட அமெரிக்க பிரேரணையின் பிரகாரம் இலங்கையின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளின் படி இந்த குற்றச்சாட்டுக்களைப் பற்றி உள்நாட்டு விசாரணையே நடத்தப்பட வேண்டும். இது இலங்கைக்கு சாதகமான விடயமாகும். ஆனால் இலங்கை அரசாங்கம் ஏனோ இந்த பிரேரணையை தோற்கடிக்க முயற்சி செய்தது. சிலவேளை இது போன்ற பிரேரணைகளால் நாட்டில் மனித உரிமை மீறப்படுகிறது என்ற கருத்து உலக மக்கள் மனதில் பதிந்து விடுகிறது என்று அரசாங்கம் நினைத்திருக்கலாம்.

கடந்த முறை பிரேரணையின் போது இந்தியா ஆற்றிய பங்கு பற்றியும் இலங்கையில் பலர் விசனத்தை தெரிவித்தாலும் இந்தியா அமெரிக்க பிரேரணையின் காரத்தை மேலும் குறைத்தது என்பது தான் உண்மை.

ஆனால் பலர் இந்த விடயங்களை கவனிக்கவில்லை. அவர்கள் வெற்றி - தோல்வி என்ற கண்ணோட்டத்திலேயே பிரச்சினையை அணுகினர். இலங்கை அரசாங்கம் எதிர்ப்பதால் நாம் அதனை ஆதரிக்க வேண்டும் என சிலர் நினைக்க இலங்கை அரசாங்கம் அதனை எதிர்ப்பதால் நாமும் அதனை எதிர்க்க வேண்டும் என்று வேறு சிலர் நினைத்தனர்.

இந்த முறையும் இந்திய மத்திய அரசாங்கத்தின் மீது தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் நெருக்குதல் இல்லாமல் இல்லை. வைகோ, நெடுமாறன், கருணாநிதி ஆகியோர் ஏற்கனவே நெருக்குவாரத்தை ஆரம்பித்துவிட்டனர். அதேவேளை இம்முறை பிரேரணை புதியதொன்றுமல்ல.

அது கடந்த வருடம் கொண்டுவரப்பட்ட பிரேரணையின் தொடர்ச்சி என்றே கூறப்படுகிறது. இந்த நிலையில் வேறு காரணங்களுக்காக ஒதுங்கியிருக்க தேவை இருந்தாலும் இந்தியாவுக்கு இம்முறையும் பிரேரணையை ஆதரிக்காமல் இருப்பது கடினமானதாகவே இருக்கும்.

# சிலம்பாட்டம்



**சி**லம்பம் என்பது தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்து கொள்ளுதல் என பல கூறுகளைக் கொண்ட விரிவான தற்காப்புக் கலை ஆகும். வழக்கில் இவ் வீரவிளையாட்டைக் கம்பு சுற்றுதல் என்றும் கூறுவர்.

சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல், எதிராளியின் உடலில் சிலம்புக்கம்பினால் தொடுதல் (தொடு புள்ளி) போன்றன அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. சிலம்பாட்டத்தைக் கற்றுக் கொள்ளக் குறைந்தது ஆறு மாத காலம் தேவை. சிலம்பாட்டம் ஆடுவதற்குக் குறைந்தது இருவர் வேண்டும். நன்கு பயிற்சி பெற்ற ஆட்டக்காரர்களே சிலம்பாட்டப் போட்டிகளில் விளையாடுவர்.

மக்கள் தம்மை சிங்கம், புலி போன்ற விலங்குகளிடம் இருந்து காத்துக்கொள்ளக் கையாண்ட முறையே சிலம்பம் எனப்படும் கலையாக வளர்ந்துள்ளது என்று சொல்வதுண்டு. தமது கைகளில் எப்போதும் இருக்கக் கூடிய சிறிய ஆயுதங்களான கம்பு (தடி), சிறு கத்தி, கோடரி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி விலங்குகளிடம் இருந்து தற்காத்துக்கொள்ள இந்தக் கலையைப் பயன்படுத்தினர் என்று கூறப்படுகிறது.

ஆதிகாலத்தில் மனிதர்கள் சண்டை செய்ய ஈட்டி, கத்தி, வேல், வாள், கம்பு போன்ற பலவிதமான ஆயுதங்களைப் பயன்படுத்தினர். அவற்றுள் மிகவும் பழமை வாய்ந்த ஆயுதம் கம்பு எனப்படும் "சிலம்பு" ஆகும்.

சிலம்பக்கலை பற்றிய அகழ்வாய்வுச் சான்றுகள் மிகத் தொன்மையானவை. கி.மு.2000இற்கும் முற்பட்ட ஆதிச்ச நல்லூர் அகழ்வாய்வில், 32 வகையான சிலம்ப ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பிரிட்டனில் உள்ள அருங்காட்சியகம் ஒன்றில் எகிப்திய போர் வீரர்கள் பயன்படுத்திய நான்கு அடி நீளமுள்ள கம்பு வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் அந்த கம்பினைப் பயன்படுத்திய முறை சிலம்பத்தை ஒத்திருப்பதால் தமிழக எகிப்திய கலாசாரப் பரிமாற்றத்தின் ஒரு பகுதியாக சிலம்பக்கலையும் பரவியதாக கருதப்படுகிறது.

சிலம்பம் என்ற பெயர் சிலம்பு என்ற வார்த்தையில் இருந்து உருவானது. சிலம்பு என்பதற்கு ஒலித்தல் என்று பொருள். சிலம்பம் ஆடும்போது உருவாகும் ஒலிகளை குறிக்கும் விதமாக சிலம்பம் என்ற பெயர் சூட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

"சிலம்பம்" என்ற சொல் "சிலம்பல்" என்ற வினையின் அடியாகப் பிறந்தது. மலைப் பகுதிகளில் அருவி விழும் ஓசை, பறவைகளின் கீச்சொலி, மரங்களின் இலைகள் காற்றில் அசையும் ஓசை, விலங்குகளின் இரைச்சல் போன்ற பல ஓசைகள் ஒலித்துக் கொண்டே இருப்பதால் மலைக்கு, "சிலம்பம்" என்ற மற்றொரு பெயரும் உண்டு. எனவே, மலை நிலக் (குறிஞ்சி) கடவுளான முருகனுக்கும், "சிலம்பன்" என்ற பெயருண்டு.

சிலம்பம் சுமார் 5000 ஆண்டுகள் பழமையானதாகக் கருதப்படுகிறது. 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அகத்திய முனிவர் 64 கலைகளில் ஒன்றாக சிலம்பத்தை குறிப்பிடுகிறார். சிலம்பம் பற்றி தமிழ் இலக்கியத்தில், குறிப்பாக சிலப்பதிகாரத்தில் சிலம்பம் ஆடுவதற்கான கம்பு, கத்தி போன்றவை ஒரு கடையில் விற்கப்படுவதாகவும் அவற்றை வெளிநாட்டினர் மிக ஆர்வமுடன் வாங்கிச் செல்வதாகவும் குறிப்புகள் உள்ளன.

திருக்குறளில் "கோல்" என்ற பெயரிலும், கலிங்கத்துப்பரணியில், "வீசு தண்டிடை கூர்மழு ஒக்குமே" என்ற வரிகள் மூலம், "தண்டு" என்ற பெயரிலும் கம்பு குறிப்பிடப் பட்டுள்ளது. திருவிளையாடற் புராணத்திலும், சிலம்ப விளையாட்டு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த "பதார்த்த குண சிந்தாமணி" என்ற நூலில் சிலம்பம் விளையாடுவதால் வாதம், பித்தம், கபம் ஆகியவை நீங்கும் எனக் கூறப்பட்டுள்ளது. இவைகளைத் தவிர கம்பு சூத்திரம், குறுந்தடி சிலம்பம், நடசாரி போன்ற ஓலைச்சுவடிகளும் உள்ளன. இச்சுவடிகளில் உள்ள பாடல்கள் அகத்திய முனிவர் சிலம்பம் பயின்ற பிறகே யோகக்கலை, மருத்துவம் போன்ற கலைகளைப் பயின்றதாகத் தெரிவிக்கின்றன.

# நேரச் சேமிப்பு

**ஒ**ரு வேலையைத் தெளிவாகத் திட்டமிட்டு காலம் கடத்தாமல் இன்னும் சொல்லப்போனால் குறித்த நேரத்திற்கு முன்பே முடிப்பதுதான் நேரச் சேமிப்பு. ஆனால் நாம் என்ன செய்கிறோம்? "நேரம் எப்படிப் போச்சுதென்றே தெரியேல்லை!" என்று சொல்லியே பலமணி நேரங்களைக் கடத்தி விடுகிறோம்.

இது ஒரு தேசியப் புலம்பல். கைக்குள் நீங்கள் பிடித்துவைத்திருந்த பட்டாம்பூச்சியை நீங்கள் திறந்துவிட்டாலொழிய பறந்து போகாது. அதுபோலத்தான் நேரமும்.

ஒரு சீன ஜென் குரு தாம் குளிப்பதற்காகத் தொட்டியில் நீர் நிரப்பும்படி சீடனுக்குக் கட்டளையிட்டார். சீடன் ஒரு பெரிய வாளியைக் கொண்டு தொட்டியை நிரப்பும்போது, மீதம் கொஞ்சம் நீர் இருந்தது. உடனே வாளியை ஒரு சுழற்று சுழற்றினான். இருந்த மிச்ச நீர் எங்கு விழுந்தது என்று தெரியாமலேயே விழுந்து காணாமல் போனது. இதைக் கண்டு குருவுக்குக் கோபம் வந்துவிட்டது. சீடன் முதுகில் ஒரு போடு போட்டார். "எதற்காகத் தண்ணீரை வீணடித்தாய்? மீதியைச் செடிக்காவது ஊற்றியிருக்கலாம் அல்லவா?" என்று கடிந்து கொண்டார். சீடன் கடுப்பானான்.

"நான் கொட்டியது ஒரு தம்ளர் அளவுகூட இருக்காது. இதனால் அந்தச் செடி வளர்ந்து, காய் காய்த்து, பழங்களைத் தரப் போகிறதா... குருவே?" என்று கோபமடைந்தான். ஆனால் கோபத்தை நேரடியாகக் குருவிடம் காண்பிக்க முடியுமா? இதனால் தனது கேள்வியை சன்னமான குரலில் நாசூக்காக வெளிப்படுத்தினான்.

குரு அப்போது சொன்னார்:

"முட்டாளே.. நான் செடியின் வளர்ச்சிக்காகவா சொன்னேன்... அரைத் துளியானாலும் அதற்கு மதிப்பளித்து வீணடிக்காமல் இருந்தால்தான் நீ வளர்வாய்!"

நேரத்தைச் சேமிக்க முதலில் மனதளவில் தயாராக வேண்டும். இந்த நபரால் நேரத்தைச் சேமித்து எந்த வேலையையும் குறித்த நேரத்தில் முடிக்க முடியும் என்று தெரிந்தால் போதும் ஆளாளுக்கு உங்களை அள்ளிக் கொள்ள, வேலை தர வரிசையில் நிற்பார்கள்!

**('உங்கள் வெற்றியின் கவுண்ட் டவுன்' என்ற நூலில்)**

# தாஜ்மஹால் இரகசியம்

**அ**ருமை மனைவி மும்தாஜ் இறந்த பின் அவள் நினைவாக ஷாஜகானால் கட்டப்பட்டது தாஜ்மஹால். அவற்றை உருவாக்க பல நாடுகளில் இருந்து பொருள்கள் வர வழைக்கப்பட்டன. அவற்றின் பட்டியல்:


**வெள்ளைச் சலவைக் கற்கள் - மக்ரானா பாறைக்கல் - பதேபூர் சிக்கிரி**
**மஞ்சள் சலவைக் கற்கள் - நர்மதை நதி மரகதக் கற்கள் - பாக்தாத்**
**முத்தும் பவளமும் - தமிழ் நாடு**
**சிவப்புக் கற்கள் - காந்தாரம்**
**நீலக்கற்கள் - இலங்கை**
**வைடூரியங்கள் - பந்தல் கண்ட்**



# சுவை மாறுபாடுகள்

**- R.P. ராஜநாயஹம் -**

**அ**சோகமித்திரனின் "கரைந்த நிழல்கள்" நாவலில் வருகிற ராம ஐயங்கார் பாத்திரம் ஜெமினி அதிபர்


அசோகமித்திரன்

வாசன் தான். அதே போல இந்த நாவலில் வருகிற டைரக்டர் ராம்சிங் பதிபக்தி, பாகப்பிரிவினை, பாசமலர், பாலும்பழமும், பார்த்தால் பசி தீரும், பந்த பாசம் படங்களை இயக்கிய பீம்சிங் தான்.

கரைந்த நிழல்கள் நாவலின் ஆறாவது அத்தியாயத்தில்...

செக்கோஸ்லோவாக்கியாவிலிருந்து வந்த விருந்தினர்களுக்கு ராம்சிங் படம் திரையிடப்படுகிறது. அந்தப்படத்தை டைரக்ட் செய்ததற்காக ராம்சிங்குக்கு ரொக்கப்பரிசும் கிடைத்திருந்தது. வெளியே போகமுடியாத சூழ்நிலையிலிருந்த செக்கோஸ்லோவாக்கியர்கள் பார்த்தார்கள். டெலிபோன் பேசவேண்டியிருப்பதைக் காரணமாக வைத்துக் கொட்டகைக்கு வெளியில் வந்த வர்த்தகசபைத் தலைவர், பிரஸ் இன்பர்மேஷன் அதிகாரியிடம் "நீங்க அந்தப் படத்தைப் பார்க்கலியா?" என்று கேட்கிறார். பதில் "அந்தத் தலைவலியை யார் பார்த்துச் சகிச்சுக்கிறது?"

அன்று மாலை செக் விருந்தினர்களுக்கு ராம்சிங்கை பிரஸ் இன்பர்மேஷன் அதிகாரி தான் அறிமுகப்படுத்துகிறார். "இவர் படத்தைத் தான் நீங்கள் இன்று காலை பார்த்தீர்கள்,"

செக் தலைவர் "ஓ". அப்படியா!.. ரொம்ப நல்ல படம்! சோக அம்சம் தான் கொஞ்சம் அதிகமாக இருந்தது"

அந்தப் படத்தில் ஆரம்பத்தில் நன்றாகப்பாடி விளையாடிக்கொண்டிருந்த வாலிபக் கதாநாயகனுக்குக் கை போய், கல்யாணமான பிறகு தாய், சொத்து, பிறந்த குழந்தை இவை எல்லாம் போய்க் குருடனாகவும் ஆகிவிடுகிறான்.

செக் காரர் இறுதியாக சொல்வது "உங்கள் கதாநாயகர்களுக்குப் பெண்மை சிறிது அதிகமாக இருப்பதாகப்பட்டது. அதிலும் உங்கள் படத்து நடிகர் எல்லாவற்றிற்கும் அழுது விடுகிறார்."



எல்லாரும் லேசாகச் சிரித்தார்கள். ராஜ்கோபால் சிறிது உரக்கச் சிரித்துவிட்டான்.

உலகத்திலேயே தலைசிறந்த நடிகர் என்று நாட்டின் "ஒருசில-ரால்" கொண்டாடப்படும் அந்த நடிகர் வலுவான சுவாசம் கொண்டவர்.

அசோகமித்திரன் மேற்கண்டவாறு விவரிக்கும் அந்த நடிகர் யார் என்பது படிப்பவர் யாவருக்கும் புரியும். சிவாஜி கணேசன்.!...

89 வயது மிருணாள் சென் பெங்காலி டைரக்டர். புவன் சோம், கோரஸ், ஒக்க ஊரி கதா, பரசுராம், காந்தார், காரிஜ், ஏக் தின் அச்சானக் போன்ற திரை ஓவியங்களை தீட்டிய மேதை.

லத்தீன் அமெரிக்க எழுத்தாளர் கப்ரியல் கார்ஸியா மார்க்வெசுக்கு நண்பர்.

எத்தனையோ உலகத்திரைப்பட விழாக்களில் இவருடைய படங்கள் பரிசு வாங்கியிருக்கின்றன. பல திரைப்பட


மிருணாள் சென்

விழாக்க்ளில் நடுவர் ஆக கௌரவிக்கப்பட்ட கலை மேதை.

மிருணாள் சென் தனக்கு கமல் ஹாசன் நடிப்பு தான் பிடிக்கும் என்று 1998இல் எஸ்.விஜயன் (சினிமா நிருபர்) அவர்களிடம் 14 வருடத்தின் முன் (தினமலர் அக்டோபர், 1998) சொன்னாராம். "அப்படியென்றால் சிவாஜி நடிப்பு?" என்று கேட்டதற்கு ஒரு மாதிரியாக முகத்தை சுளித்தாராம். "எனக்கு அழுது நடிப்போரைக் கண்டாலே பிடிக்காது. ஆண்கள் அழுவது கூடாது" என்றாராம். "அழுகையும் ஒரு நடிப்பு தானே?" என்று இவர் கேட்ட போது மிருணாள் சென் பதில் "நோ நோ".



# 128 ஜிபியுடன் புதிய ஐபேட்*

அப்பிள் சென்ற வாரம் தன் ஐபேட் வரிசையில், புதியதாக ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது. இதன் ஸ்டோரேஜ் திறன் 128 ஜிபி. இதில் ரெடினோ டிஸ்பிளே உள்ளது. ஏற்கனவே ஐபேட் 4 மாடலில், 16, 32, 64 ஜிபி கொள்ளளவு திறனுடன் வடி வமைக்கப்பட்டவை இருந் தன. இப்போது 128 ஜிபியுடன் வந்துள்ளது. தன்னுடைய புதிய ஒப்பரேட்டிங் சிஸ்டம் IOS வெளியான மறுநாள், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதுவரை 12 கோடி ஐபேட் சாதனங்கள் விற்பனையாகி உள்ளன. மக்கள் இதனை மிகவும் நேசிக்கத் தொடங்கி விட்டனர். கம்ப்யூட்டர்களைக் காட்டிலும், அவர்கள் ஐபேட் சாதனத்தையே வேலை பார்க்கவும், பொழுது போக்கவும் பயன்படுத்துகின்றனர். இதில் பயன்படுத்தவென 3இலட்சம் அப்ளிகேஷன்கள் தற்போது கிடைக்கின்றன என்று அப்பிள் நிறுவன துணைத் தலைவர் ஷில்லர் கூறியுள்ளார். பெப்ரவரி 5 முதல் வர்த்தக ரீதியாக உலகெங்கும் இது கிடைக் கிறது. வைபி மட்டும் உள்ள ஐபேட் 799 டொலர். சிம் வசதி கொண்டது 929 டொலர்.

# வேர்டில் எண் எழுதும் முறை




வேர்ட் புரோகிராமில் டொகுமெண்ட்களை அமைக்கும் போது, எண்களை டெக்ஸ்ட்டுடன் பயன்படுத்த வேண்டியது இருந்தால், ஒற்றை இலக்கமாக இருப்பின், இலக்கத்தினை எழுத்தில் எழுதுவதே சிறந்தது. "He ate 7 biscuits" என்று எழுதுவதைக் காட்டிலும் "He ate seven biscuits>" என எழுதுவதே சிறந்தது. நீங்கள் விரும்பினால், வேர்ட் மேற்கொள்ளும் இலக்கண சோதனையையும் (Grammar) இதற்கேற்றபடி மாற்றி அமைக்கலாம். இதனை மேற்கொள்ள கீழ்க்குறித்தபடி அமைக்கவும்.


1. ஒபீஸ் பட்டன் கிளிக் செய்து, அடுத்து Word Options என்பதில் கிளிக் செய்திடவும். இப்போது Word Options டயலொக் பொக்ஸைக் காட்டும்.

2. இந்த டயலொக் பொக்ஸின் இடது பக்கத்தில் உள்ள Proofing என்ற ஒப்ஷனில் கிளிக் செய்திடவும்.

அடுத்து Settings பட்டனில் கிளிக் செய்திடவும். வேர்ட் Grammar Settings டயலொக் பொக்ஸைக் காட்டும். இங்கு ஒப்ஷன் பட்டியலில் கீழாகச் செல்லவும். இதில் Numbers ஒப்ஷன் வரை செல்லவும். இதில் டிக் அடையாளம் ஒன்றை ஏற்படுத்தவும். பின்னர் கிராமர் மற்றும் வேர்ட் ஒப்ஷன்ஸ் டயலொக் பொக்ஸ்களை மூடி வெளியேறவும்.




# பேனா வடிவில் ஸ்கானர்





துரித வளர்ச்சி கண்டுவரும் தொழில்நுட்பத்தினால் இலத்திரனியல் சாதனங்களின் அளவு குறுகி வருவதுடன் அவற்றின் வினைத்திறன்களும் அதிகரிக்கச் செய்யப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் தற்போது பேனா அளவே ஆன ஸ்கானர் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 5 மெகாபிக்சல் சென்சாரினைக் கொண்ட இந்த ஸ்கானர் ஆனது 2048 x 1536 Pixel Resolution - இல் புத்தகங்கள், பத்திரிகைகள் உள்ள தகவல்களை நிழற்படமாக பிரதி செய்வதுடன் அவற்றினை சேமிப்பதற்காக 1 GB சேமிப்பகத்தினையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் 125 டொலர்கள் பெறுமதியான இச்சாதனத்தில் ரெக்கோர்டிங் வசதியும் காணப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

# ஜிமெயிலில் சேமிப்புக் கிடங்கு

மற்ற இமெயில் புரோகிராம்களிலிருந்து ஜிமெயில் தனிப்பட்டு தெரிவதற்குப் பல சிறப்பு கள் உள்ளன. அவற்றில் ஒன்று அதன் ஆர்க்கைவ் எனப்படும் காப்பகம் ஆகும். இதில் மெயில்களைப் பாதுகாப்பாக வைத்திடலாம்.

ஜிமெயிலின் ஒரு சிறந்த வசதி அல்லது பரிமாணம் அது தனக்கென ஒரு சேமித்து வைக்கும் (கொடவுண், கிட்டங்கி) இடத்தை வைத்திருப்பதுதான். இந்த ஆர்க்கைவ் என்பது உங்கள் மெயில்களைப் பல ஆண்டுகள் தொடர்ந்து வைத்திருக்கும் என்பதல்ல. அவற்றை அது விடவே விடாது என்றும் விட்டு விடாது என்றும் எண்ண வேண்டாம்.



இந்த ஆர்க்கைவ் பட்டனை உங்கள் ஜிமெயிலின் இன்பொக்ஸ் தோற்றத்தில் காண லாம். இதில் கிளிக் செய்தால் அது அப் போது கேர்சர் உள்ள இமெயில் செய் தியை இன்பொக்ஸிலிருந்து எடுத்துவிடு கிறது. இன்பொக்ஸிலிருந்து எடுக்கப்பட்ட இமெயில் எங்கு செல்கிறது? இது நீங்கள் அந்த இமெயில் செய்திக்கு ஏதேனும் லேபிள் பெயர் தந்திருக்கிறீர்களா என் பதைப் பொறுத்து உள்ளது. நீங்கள் அதற்கு லேபிள் கொடுத்திருந்தால் அது அந்த லேபிளுக்கான பொக்ஸிற்குச் செல்கிறது. இதனை All Mail பிரிவிலும் பார்க்கலாம்.

உண்மையில், உங்கள் ஜிமெயிலுக்கு ஒரு இமெயில் செய்தி வந்தவுடன் அது தானாகவே இன்பொக்ஸ் லேபிளை வாங்கி கொண்டு இன்பொக்ஸ் பிரிவில் வைக்கப்படுகிறது. இதனுடைய லேபிளை மாற்றாதவரை அது வேறு எந்த பிரிவிற்கும் மாற்றப்படுவதில்லை. இதற்கு ஒரு லேபிள் தராமல் ஆர்க்கைவ் பட்டன் அழுத்தி ஆர்க்கைவ் பிரிவிற்கு அனுப்பி னால் All Mail வியூவில் மெசேஜிற்கு அடுத்தபடியாக "Inbox" என்று இருப்பதைக் காணலாம். இது எதற்காக என்றால் உங்களின் அனைத்து மெயில்களையும் நீங்கள் அவை எங்கிருந்து வந்தவை என்று பார்ப்பதற்காக. அதே நேரத்தில் அவை All Mail போல்டரிலும் காட்டப்படுகின்றன.


இதனை விளக்கமாகப் புரிந்து கொள்ள, கீழ்க்கண்டபடி செயல்படவும். இன்பொக்ஸ் சென்று ஏதேனும் ஒரு இமெயில் மெசேஜைத் தேர்ந்தெடுக்கவும். இதற்கு ஒரு லேபிள் கொடுக்கவும். ஆனால் ஆர்க்கைவ் செய்திட வேண்டாம். இனி நீங்கள் கொடுத்த லேபிள் வியூ சென்று அங்கு உள்ள பட்டியலில் இந்த இமெயில் செய்தி இடம் பெற்றிருப்பதனைக் காணுங்கள். இங்கு நீங்கள் கொடுத்த லேபிளும் முதலிலேயே அதற்கு வழங்கப்பட்ட இன்பொக்ஸ் லேபிளும் காட்டப்படுவதனைக் காணலாம். இவை All Mail போல்டரிலும் காட்டப்படும்.


இப்போது மீண்டும் இன்பொக்ஸ் சென்று இன்னொரு மெசேஜைத் தேர்ந்தெடுங்கள். இப்போது அதற்கு ஒரு லேபிள் அமைத்து ஆர்க்கைவ் பட்டனையும் அழுத்தி ஆர்க கைவ் செய்திடுங்கள். அடுத்து லேபிள் வியூவில் சென்று பார்த்தால் நீங்கள் அதற்குக் கொடுத்த லேபிள் இருக்கும். ஆனால் இன்பொக்ஸ் லேபிள் இருக்காது. ஒரு மெசேஜை ஆர்க்கைவ் செய்திடுகையில் அந்த இமெயில் செய்திக்கு வழங்கப்பட்ட இன்பொக்ஸ் லேபிள் நீக்கப்படுகிறது.இதனால் இந்த இமெயில் மெசேஜ் இன்பொக் ஸில் தொடர்ந்து காட்டப்படமாட்டாது. நீங்கள் தான் அதனை கொடவுனில் போட்டுவிட்டீர்களே.

ஆர்க்கைவ் செய்ததை மீண்டும் மீட்டு இன்பொக்ஸ் கொண்டு வர வேண்டுமானால், ஆர்க்கைவ் சென்று மீட்க விரும்பும் மெசேஜில் கேர்சரைக் கொண்டு செல்லவும். அங்கு More Actions என்று ஒரு லிங்க் கிடைக்கும். அத னைக் கிளிக் செய்து கிடைக்கும் மெனுவில் உள்ள Move to Inbox என்பதில் கிளிக் செய்திடவும். நீங்கள் அந்த மெசேஜிற்குச் செய்ததெல்லாம் மீண்டும் ரிவர்ஸ் ஆகி அந்த மெசேஜ் இன்பொக்ஸிற்குச் சென்றுவிடும்.


# புகைப்படத்தை அனிமேஷன் செய்வது எப்படி?

போட்டோவை அனிமேட் செய்ய இந்த தளம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நிறைய அனிமேஷன் இல்லை என்றாலும் அனிமேட் உரு வாக்குவது மிகவும் ஈசியாக உருவாக்கலாம். அதற்கு முதலில் இந்த http://www.loogix.com/ தளத்திற்கு செல்லவும். பிறகு உங்களுக்கு எந்த அனிமேஷன் பிடித்து உள்ளதோ அந்தப் படத்தின் மேலே கிளிக் செய்யவும். உதவிக்கு கீழே உள்ள படத்தைப் பார்க்கவும்.





அடுத்து போட்டோ அப்லோட் செய்து Generate Animation கிளிக் செய்யவும். உதவிக்கு கீழே உள்ள படத்தைப் பார்க்கவும்



அவ்வளவுதான் அனிமேஷன் தயார். உங்களுக்கு விருப்பம் இருந்தால் அந்த தளத்தில் இருந்தே பேஸ்புக்கில் சேர் செய்யலாம். அல்லது கோடிங் எடுத்து உங்கள் தளத்தில் இணைத்துக் கொள்ள லாம். உதவிக்கு அருகில் உள்ள படத்தை பார்க்க வும்



# சமுர்த்தி உத்தியோகத்தருக்கு சம்பள நிலுவையும், பதவி உயர்வும்

## – மனித உரிமை ஆணைக்குழுவின் முயற்சிக்கு பயன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் தீவிர முயற்சியினால் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரின் 25 மாத சம்பள நிலுவை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பள நிலுவை சம்பந்தமான தீர்வு கிட்டப் பட்டதையிட்டு யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி ரி. கனகராஜ் செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் விளக்கமளித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் கடந்த 2006ஆம் ஆண்டு ஏ-9 வீதியினூடாக வன்னிப் பிரதேசத்திற்கு சென்ற சமயம் யுத்தம் ஆரம்பித்ததினால் தென்மராட்சிக்கு திரும்பி வர முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலகத்தால் தற்காலிக இணைப்பை பெற்று அங்கு கடமையாற்றியுள்ளார். இது பற்றி தென்மராட்சி பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபால் மூலம் அறிவித்துள்ளார். இவருக்கான மாதாந்த வேதனம் யாழ்ப்பாணத்திற்கு வந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் 2008 ஆகஸ்ட் வரையான 25 மாதத்திற்கான சம்பளம் வழங்கப்படவில்லை. இவ்வாறு சம்பளம் வழங்கப்படாத நிலையிலும் கண்டாவளை பிரதேச செயலர் அலுவலகத்தில் இவர் கடமையாற்றியுள்ளார்.

மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், பிரதேச செயலாளர் எனப் பலரிடமும் முறையிட்டும் எந்தப் பலனும் கிட்டவில்லை.

2010 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் பின்னர் இச்சமுர்த்தி உத்தியோகத்தர் மீண்டும் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையில் இணைந்து கடமையாற்றி வருகின்றார். ஆனாலும் இச்சம்பள நிலுவை வழங்கப்படவில்லை.

2011.12.09 ஆம் திகதி இதுபற்றி யாழ். மனித உரிமை அலுவலகத்தில் முறையிட்டார். இதற்கமைய இவரிடம் ஆய்வு அறிக்கை பெறப்பட்டது.

இவ்வறிக்கையின் பிரகாரம் அவர் கண்டாவளையில் தொடர்ச்சியாக கடமையாற்றியது தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விசாரணைகள் நடைபெற்றன. 6.3.2012ஆம் திகதி இவ்விசாரணைகள் இடம் பெற்றன. அரச அதிபர், சமுர்த்தி உதவி ஆணையாளர், தென்மராட்சி பிரதேச செயலாளர், சமுர்த்தி தலைமையக அதிகாரி, கண்டாவளை பிரதேச செயலர், சமுர்த்தி பணிப்பாளர் சார்பான அதிகாரி என பிரதிவாதிகளாக காணப்பட்டோரிடம் விசாரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவரது வரவு பதிவுப்புத்தகம் அழிந்து விட்டதாகவும், சகல ஆவணங்களும் இறுதி யுத்தத்தில் காணாமல், அழிந்து போனதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனால் சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதில் மேலும் ஒரு பிரதிவாதியாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரும் அடையாளப்படுத்தப்பட்டார். பிரதிவாதிகள் கள ஆய்வு செய்து அதற்கான அறிக்கை சமர்ப்பிக்க ஆணைக்குழு உத்தர விட்டது.

இதற்கமைய சமுர்த்தி உத்தியோகத்தரின் சம்பள நிலுவை, வாழ்க்கைப்படி செலவு, திருத்தப்பட்ட சம்பள உயர்வு உள்ளடங்கலாக சகல கொடுப்பனவுகளும் வங்கிக் கணக்கில் இடப்பட்டதாகவும், கிட்டத்தட்ட 4 இலட்சம் ரூபா அளவில் இவருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என்றார்.

தற்போது இச்சமுர்த்தி உத்தியோகத்தர், சமுர்த்தி முகாமையாளராக பதவிஉயர்வு பெற்று கண்டாவளை பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



கிளிநொச்சி ம காவித்தியாலயத்தில் கணனிக்கல்வி கற்றுவரும் மாணவர்களில் ஒருபகுதியினரையும் கணனிக் கல்வியை போதிக்கும் ஆசிரியர் என். பிரியந்தனையும் காணலாம்.

# அதிகரிக்கின்றது டெங்கு; விழிப்புணர்வு அவசியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலையில் டெங்கு நோய்த்தாக்கத்திற்கு இலக்காகி சிகிச்சைபெற வருபவர்களின் எண்ணிக்கை இந்த வருடத்தில் இதுவரை 76ஆக அதிகரித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிறவுண்வீதியில் இருந்து ஒருவரும் கடந்த புதன்கிழமை திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் இருந்து தலா ஒவ்வொருவரும் இவ்வாறு டெங்கு நோய்த்தொற்றிற்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கோப்பாய் மற்றும் குருநகர்ப் பகுதிகளில் இருந்து தலா ஒவ்வொருவரும் இவ்வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் இந்த வருடத்தில் மாசிமாதம் 08ஆம் திகதிவரை டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 76ஆக அதிகரித்துள்ளது. இதனை யாழ். போதனாவைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறு இருக்க, யாழ்.குடாநாட்டில் இந்த நோயை பரிபூரணமாக கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ். அரச அதிபரால் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் விழிப்புணர்வுவாரம் கடந்த 5ஆம் திகதியில் இருந்து 12ஆம் திகதிவரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக்காலப்பகுதியில் பிரதேசசெயலர் பிரிவு ரீதியாக கிராம சேவைகள் பிரிவுகள் தோறும் டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகும் பகுதிகளில் சிரமதானம், புகையூட்டல் மற்றும் விழிப்புணர்வூட்டும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (பா,10)

# சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு

(அரியாலை)

பண்ணை கோட்டைப்பகுதிக்கும் மற்றும் பண்ணை கடற்கரைப் பகுதிக்கும் அண்மைக்காலமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

தென்னிலங்கையிலிருந்து தீவகம் நோக்கி செல்லும் சுற்றுலாப்பயணிகள் முதலில் இப்பகுதிக்கே சென்று பழமையான கோட்டையையும் கடற்கரையின் அழகிய ரம்மியத்தையும் கண்டு களிக்கின்றனர்.

இதைவிட கடற்கரைப் பகுதி நவீனமயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (23)

# பதிவிறக்கப் பெட்டகம்

எல்லா மனிதர்களுக்கும் காலங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் பொதுவான ஆணித்தரமான கருத்துகளை தோரணையான குரலில் சொல்லிக்கொள்ள விரும்பாத சாதாரணன் நான். என் அபிப்பிராயங்கள் தினசரிகளின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் (சில சமயங்களில் ஆச்சரியக்குறியுடன்) போடுகிற வகையைச் சேர்ந்தவையல்ல. லட்சக்கணக்கானவர்கள் ஆவேசத்துடன் ஒத்துப்போகக் கூடியவையல்ல. **– அசோகமித்திரன்**

எனக்கு ஊக்கமளிக்கும் அறிவுரைகளைக் கொட்டிக் கவிழ்த்துவிடும் ஆவலோடு யாரும் தயவுசெய்து வந்துவிடாதீர்கள். உடல் ஆரோக்கியம் மிக்க ஒருவன் நோய்வாய்ப்பட்ட இன்னொருவனை தன்னுடைய ஆரோக்கியத்தின் ஒரு துளியை கொண்டும் உத்வேகப்படுத்திவிட முடியாது. ஒரு மனிதனின் சூழ்நிலைகளை எல்லாம் ஆழ்ந்தறிந்து விடலாம் என்று நீங்களாக் முடிவுசெய்து விடாதீர்கள். **– கதே**

உண்மையாக வாழ்பவன், ஆர்வத்துடன் போராடுகிறவன். தனது கூண்டுக்குள் பிறரை இழுப்பவனல்லன். அவன் கூண்டுகளை உடைத்தெறிபவன். வாழ்வின் சுகந்தத்தை நுகர்ந்து, வளர்ந்து, அதன் செல்வத்தை அடைய, நமது அனுபவங்களினூடேதான் சென்றாக வேண்டும். இதற்குப் பிரசாரங்கள் அவசியமல்ல. உங்கள் சொந்த வாழ்வே உங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். இந்த வாழ்வுக்கு அழுத்தம் கொடுப்பவராக நீங்கள் இருந்தால், துக்கத்தின் கூண்டுக்குள்ளிருந்து வெளியேறுகிறீர்கள். **– ஜே.கிருஷ்ணமூர்த்தி**

அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுவது ஒருவரைப் பெரியவராக்கி விடுவதில்லை. சிறியவனாக நிற்கக் கூட அஞ்சாத ஒரு நூற்றுவீத அச்சமின்மைதான் பெரியோனின் இலட்சணம். சநாதனி, தன்னைப் பிறர் பெரியோனாக மட்டுமே கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டவன்; இதற்காகப் பிறப்புரிமைகள், அந்தஸ்துகள், சடங்குகளை எல்லாம் சநாதனி உருவாக்குவான். மெய்மையைச் சார்ந்தவனது அன்றாட வாழ்வு, இதனை நிராகரித்து, இதன் வேரையே அறுத்துச் செல்வது. **– பிரமிள்**

இடதுசாரி, வலதுசாரி என்பதன் மிக எளிய அடையாளம் என்பது மக்கள் மையமான சிந்தனை, ஆதிக்க மையமான சிந்தனை என்பதே. ஒவ்வொரு தனிமனிதருக்காகத்தான் அமைப்பும், சமூக விதிகளும், அரசுகளும் என்னும் புரிதலும், அரசு, சமூக மேலாண்மை, விதிகள் இவற்றிற்கு சேவை செய்து அடிமைப்பட்டு இருப்பதற்குத்தான் தனிமனிதர்கள் என்னும் புரிதலுக்கும் இடையில் உள்ள மோதலில் தொடங்குவது இது. **– பிரேம் ரமேஷ்**

ஜனநாயகம் என்பது என்றைக்கும் வந்து முடிந்துவிடுகிற விஷயமல்ல. ஜனநாயகம் என்பது ஜனநாயகத்திற்கான போராட்டம் மட்டுமே. ஒரு தேவதூதனின் வருகைக்காகக் காத்திருப்பதுபோல நாம் ஜனநாயகத்திற்காகவும் காத்திருந்துதான் ஆக வேண்டும். அந்தக் காத்திருப்பின் வடிவம் கையாலாகாத்தனமல்ல. அதுவும் போராட்டம்தான். **– தெரிதா**

சமரசங்களுக்குப் பிறகு நாம் கோபமும் துவேசமும் கொண்டவர்களாகிறோம். வன்முறை அவ்வுணர்வுகளின் வெளிப்பாடுதான். பிறர் மீது மட்டுமல்ல, நம்மீதே அவ்வன்முறை திரும்புகிறது. ஏந்துபவனின் இரத்தம் விழாமல் வாள் ஓயாது. வன்முறைக்கு நம்மை மாற்றும் சக்தி உண்டு. அது நம் எதிரிகளை போன்றவர்களாக நம்மையும் ஆக்குகிறது. அது வெற்றியல்ல. பெரும் தோல்வி. நம்மை மேம்படுத்திக் கொள்வதே உண்மையான போராட்ட முறை. **– பி.தொ.நிழலின் குரல்**

எதையும் விரும்பாமல் இருக்கும்போது, ஒருவன் எதையும் கைப்பற்றுவதில்லை. எதையும் கைப்பற்றவில்லை என்றால், அவனுக்கு கவலை இல்லை; பரபரப்பு இல்லை. மனதுக்கு அமைதி கிடைக்கிறது.**– 'நிர்வாண நிலை' பற்றி புத்தர்**

எவருடைய வாழ்க்கை வாழ்க்கையாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது? வாழ்வதற்கான உரிமை எவரெவருக்கு உண்டு என்று இங்கே புரிந்துகொள்ளப்படுகிறது? இவையே இங்கு கேட்கப்பட வேண்டும். **– ஜூடித் பட்லர்**

பயணத்தின் முக்கியத்துவத்திற்குச் சற்றும் குறைந்ததல்ல அவை பாதைகளில் உருவாக்கவிருக்கும் மாற்றங்களும் பாதிப்புகளும். **– மார்கெரித் துராஸ்**

# அரச காணிகளின் பயன்பாடு; புதிய நடைமுறை ஆரம்பம்

## காணியற்றவர்களுக்கு விமோசனம்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் அரசகாணிகளை பொதுமக்களுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பான புதிய சுற்றுநிருபத்துக்கு அமைவாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற முரண்பாடுகளுக்கு பின்பு அரச காணிகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் துரித செயற்திட்டம் தொடர்பான காணி ஆணையர் நாயகத்தின் 2013/01 இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் 2013 மற்றும் 2014 ஆகிய இரண்டு வருடங்களில் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பான வழிகாட்டல் இந்தச் சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ளன.

இந்த செயற்பாட்டு வேலைத்திட்டம் 'பிரச்சினைகளை இனம் காணுதல்', 'பிரச்சினைகளிற்கான தீர்வுகளை எடுத்தல்' ஆகிய இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டது.

மக்கள் தமது பிரச்சினைகளை சமர்ப்பிப்பதற்கு பிரதேச செயலாளர்களால் வழங்கப்படும் படிவங்களை பூரணப்படுத்தி தமது கோரிக்கையை முன்வைத்தல் வேண்டும். இதைப் பெற்றுக்கொண்டதற்கான ஆவணம் பிரதேச செயலாளரால் வழங்கப்படும்.

· பெற்றுக்கொண்ட படிவங்களை "காணிகள் இல்லாத அல்லது காணிகள் இழந்த நபர்களின் விபரங்களைச் சமர்ப்பித்தல்" "அரச காணிகள் தொடர்பாக நபர்கள் முகம்கொடுத்துள்ள வேறு பிரச்சினைகளை சமர்பித்தல்" என வகைப்படுத்தப்படும்.

மக்களிடம் பெற்றுக்கொண்ட பிரச்சினைகளை வகைப்படுத்தி கிராம சேவையாளர் ரீதியாக பகுதிநாட் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு பிரதேச செயலாளர் தலைமையில் தீர்வு காணப்படும். பிரதேச செயலாளரால் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறும் நடமாடும் சேவையில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு, காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், மாகாண காணி ஆணையாளர் போன்றோரின் ஒத்துழைப்புடன் இறுதியான தீர்வு காணப்படும். இந்த சுற்று நிருபத்திற்கு அமைவாக வேலைத்திட்டம் நடைபெற்று வருவதை மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் கண்காணித்து வசதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றுநிருபத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக கௌரவ ஆளுநரும், மாவட்டங்களின் மேலதிக அரசாங்க அதிபர்களும் பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடலொன்று ஆளுநர் செயலகத்தில் ஏற்கனவே நடைபெற்றது.

இது தொடர்பாகப் பொது மக்களுக்கு அறிவுறுத்துவதற்கான விரிவான பிரசாரங்கள் மேற்கொள்ளல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறிகள் பற்றி ஆராயப்பட்டதுடன் இது தொடர்பாக மாகாண மட்டத்தில் மாதம் ஒரு முறை கௌரவ ஆளுநர் தலைமையில் மீளாய்வு செய்து, மக்களது பிரச்சினைகளை விரைவாக தீர்ப்பதற்கான வழிமுறைகளும் கவனமெடுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலின் போது ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் விவசாய அமைச்சின் செயலாளர் யு.எல்.எம்.ஹான்டின் வடமாகாண காணி ஆணையாளர் பி.தயானந்தன், மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர் எனப்பலர் கலந்து கொண்டனர்.

வடமாகாணத்தில் காணப்படும் காணிப்பிரச்சினைகளை விரைந்து தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் உரிய அதிகாரிகளிடம் கேட்டுகொண்டனார்.

# பழிக்குப்பழி வாங்கிய மூவருக்கு தூக்குத்தண்டனை

(கல்முனை)

கொலைக்காக மற்றுமொருவரை கொலைசெய்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட மூவரை குற்றவாளிகளாக இனங்கண்ட கல்முனை நீதிமன்றம் அந்த மூவருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

அம்பாறை - இறக்காமம் பிரதேசத்தில். தமது உறவினர் ஒருவரை கொலை செய்தவரை துப்பாக்கியால் சுட்டும் கத்தியினால் வெட்டியும் கொலைசெய்த அதே பிரதேசத்தைச் சேர்ந்த மூவருக்கு கல்முனை மேல்நீதிமன்ற நீதிபதி மரணதண்டனை வழங்கி தீர்ப்ப ளித்துள்ளார்.

இறக்காமம் நான்காம் பிரிவைச் சேர்ந்த எம்.ஐ.நூர்தீன் அல்லது ரசாக் என்றழைக்கப்படுபவரை கடந்த 2002 ஆம் ஆண்டு அதே பிரதேசத்தில் வைத்து மூன்று பேர் துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் வெட்டியும் கொலை செய்துள்ளனர்.

கொலை செய்யப்பட்டவர் தமது உறவினர் ஒருவரை ஏற்கனவே கொலை செய்துள்ளதாகவும் அதனால் அவரை கொலை செய்து பழிக்குப் பழிவாங்குவதற்காக கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூன்று பேரையும் பொலிசார் கைது செய்தனர்.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களையும் அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்புட்டு ஆரம்ப வழக்கு விசாரனை இடம்பெற்றுவந்தது. பின்னர் கல்முனை மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை மாற்றப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேகநபர்கள் மூவரையும் குற்றவாளிகளாக இனங்கண்ட நீதிமன்றம் அந்த மூவருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

# திரைப்படக்கூட்டுத்தாபனத்தின் முடிவுக்கு நீதிமன்றம் தடை

(கொழும்பு)

ஒவ்வொரு திரைப்படத்தின் முதல் காட்சிக்கான பிரதிகள் 35 இற்கு மேற்படாமல் மட்டுப்படுத்தப்படவேண்டும் என்று இலங்கை திரைப்படக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்திற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கும் வரும் வகையில் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திற்கே மாவட்ட நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை இடைக்கால தடைவிதித்துள்ளது. அ[illegible] கடிதத்தை வலுவற்றதாக ஆக்கக்கோரி திரைப்பட தயாரிப்பாளர்கள் ஐவரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு உட்படுத்திய போதே நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

மனுவில் பிரதிவாதிகளாக தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனம் மற்றும் அதன் தலைவர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

நீதிமன்றத்தின் இந்த தடையுத்தரவு எதிர்வரும் 22ஆம் திகதி வரையிலும் அமுலில் இருக்கும்.

# வீதிக்கு விமோசனம் எப்போது கிடைக்கும்?

(புத்தூர்)

யாழ்.பருத்தித்துறை பிரதானவீதியில் இருந்து நடராஜா இராமலிங்க வித்தியாலயம் செல்லும் சிவன் வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

புத்தூர் பிரதேச சபையின் நிர்வகிப்பின் கீழ் காணப்படும் இவ் வீதி பல வருடங்களாக திருத்தாமல் கவனிப்பாரற்று காணப்படுவதாகவும், பல முறை இவ் வீதியினை திருத்தி தருமாறு வேண்டுகோள் விடுத்தும் உரிய அதிகாரிகள் கவனிப்பாரற்று நடந்து கொள்வதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர். பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் என அதிகமாக பாவிக்கும் இவ் வீதி மழை காலத்தில் குளம் போல் நீர் தேங்கி வடிந்தோட வழியில்லாமல் தொடந்தும் தேங்கி நிற்பதால் பாடசாலை மாணவர்கள் சீருடையில் சேறும் சகதியும் படிந்த வண்ணம் பாடசாலை செல்வதாக கூறுகின்றனர். எனவே மாணவர்களின் நன்மை கருதியாவது இவ்வீதியினை புனரமைத்து தருமாறு இப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (15)

# தினக்குரல் மீதான தாக்குதலுக்கு "புளொட்" கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் பகுதியில் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் தினக்குரல் பத்திரிகை விநியோகஸ்தர் மோசமாக தாக்கப் பட்டமையையும், தினக்குரல் பத்திரிகைகளும், மோட்டார் சைக்கிளும் எரியூட்டப்பட்டமையையும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) அமைப்பு தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

ஊடகவியலாளர்களும், ஊடக ஊழியர்களும் தாக்குதல்களுக்கு உள்ளாவதும், மிரட்டப்படுவதும் இலங்கையில் அதிகரித்துள்ளதை அண்மைக்கால நிகழ்வுகள் காட்டி நிற்கின்றன.

குறிப்பாக தமிழ் ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் ஒரு வாடிக்கை நிகழ்வாகவே மாறிவிட்டுள்ள நிலைமை தோன்றியுள்ளது.

வடக்கு - கிழக்கு பகுதிகளின் உண்மை நிலவரங்களையும், அன்றாடம் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் அடக்குமுறைகளையும், துன்பங்களையும் வெளி உலகுக்கு தெரியப்படுத்தும் பணியை தமிழ் ஊடகங்களே துணிவுடனும், நேர்மையுடனும் செய்துவருகின்றன என்பதே இவ்வாறான தாக்குதல்களுக்கு முதன்மையான காரணமாகுமென்பதில் ஐயமில்லை.

குடாநாட்டில் எங்கும் எப்போதும் படையினரின் பிரசன்னம் இருக்கும்போது தாக்குதல்களை நடத்தியவர்கள் யாரென தெரியாதென்பது முழுப்பூசணியை சோற்றுக்குள் மறைப்பதற்கு ஒப்பானது.

ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைகளின் பின்னருங்கூட நிலைமைகள் இவ்வாறே தொடர்வதென்பது அரசின் அதிமெத்தனப் போக்கையே காட்டிநிற்கிறது.

அண்மையில் தகவல் சுதந்திரத்திற்கான எல்லைகளற்ற செய்தியாளர்களுக்கான அமைப்பு நாடுகளுக்கான பத்திரிகை சுதந்திர தரவரிசையில் இலங்கை 163ஆவது இடத்திற்கு கீழிறங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்ப்படுத்துவதாக உலகநாடுகளுக்கு உறுதியளிக்கும் அரசு, ஊடகங்களின்மீதான இவ்வாறான தாக்குதல்களை தடுத்துநிறுத்தத் தவறுவது அதன் மீதான அவநம்பிக்கையை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

ஊடக சுதந்திரம் மறுக்கப்படும்போது ஒட்டுமொத்த ஜனநாயக உரிமைகளுமே மறுக்கப்படுகிறது. இதனை நாம் மிகவும் வன்மையாக கண்டிப்பதுடன் இத் தாக்குதலில் ஈடுபட்டவர்களை காவல்துறை இனங்கண்டு அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம் என்று புளொட் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மக்கள் சந்திப்பில் தோன்றியது முறுகல்

## பின்வாங்கினார் சுரேஸ் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் பொதுமக்கள் சந்திப்புக்காகச் சென்ற கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருடன் அப்பகுதி மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்.நாவற்குழி பிரதேசத்திலுள்ள நிலைமைகளைப் பார்வையிடச் சென்றிருந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரனுடன் அங்கு வசிக்கும் மக்கள் சிலர் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த பகுதியிலுள்ள நிலைமைகள் குறித்துப் பார்வையிட நாடாளுமன்ற உறுப்பினர் கடந்த வெள்ளி காலை சென்றிருந்தார். இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பிரை அணுகிய மக்கள் சிலர் இந்த இடத்தில் நாங்கள் வாழப்போகின்றோம் என கூறினர்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர், நீங்கள் இருக்கும் இந்த இடத்தில் முன்னர் தமிழ் மக்கள் வாழ்ந்தனரே, அவர்களுடைய நிலை என்ன? அவர்களுக்கு யார் பொறுப்புக் கூறுவார்கள் என கேட்டார். அப்போது அவருடன் வாய்த்தர்க்கத்தில் மக்கள் ஈடுபட்டனர்.

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான விஞ்ஞானபாட விசேட செயற்றிட்டம்

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

**01)**

**i)** பரவல், பிரசாரணம், உயிர்ப்பான அகத்துறிஞ்சல் ஆகியவற்றின் மூலம் நீர், கனியுப்புக்கள், வாயுக்கள் ஆகியவை தாவரப் பகுதிகளுக்குள் செல்கின்றன.

a) மண்ணில் உள்ள நீர் முதலில் எந்த அமைப்பின் ஊடாக உட்செல்கின்றது?
b) வினா 'a' இல் நீர் குறிப்பிட்ட அமைப்பின் ஊடாக எம் முறையில் நீர் உட்செல்கிறது?
c) இலைகளுக்குள் காபனீரொட்சைட்டு எம் முறையின் மூலம் உட் செல்கின்றது?

**ii) வேரினால் உள் எடுக்கப்பட்ட நீர் தண்டுகளின் ஊடாக இலைகளை அடைகின்றது. தண்டுகளிலும் வேரிலும் கடத்தும் கலன்கள் உண்டு.**

a) கடத்தும் கலன்கள் இரண்டின் பெயர் குறிப்பிட்டு, அவற்றால் கடத்தப்படும் பதார்த்தங்களையும் தருக.
b) நீர் குறிப்பிட்ட இரு கடத்தும் கலன்களுக்கும் இடையே உள்ள அமைப்பு வேறுபாடு இரண்டு தருக.
c) இருவித்திலைத் தாவரத்தண்டின் கலன் கட்டில் நீர் குறிப்பிட்ட இரு கலன்களும் அமைந்திருக்கும் முறையை குறிப்பிடுக.

**iii) இலையில் வாயுக்கள் உட்செல்லும் அமைப்பை அவதானிப்பதற்கு இலையின் கீழ்ப்புற மேற்றோல் உரிப்பு எடுக்கப்படுகின்றது.**

a) நுணுக்குக்காட்டியின் ஊடாக மேற்றோல் உரிப்பை பார்த்தபோது அங்கு அவதானித்த இருவகையான கலங்களை பெயரிடுக.
b) இரு வித்திலை இலையின் மேற்றோல் உரிப்பில் அவதானித்த கலங்களை வரைந்து பெயரிடுக.

**02) அணுக்கள் இணைந்து மூலக்கூறுகளை உருவாக்குகின்றன. மூலக்கூறுகள் ஒரே இன அணுக்கள் இணைந்ததாகவோ, வெவ்வேறு இன அணுக்கள் இணைந்ததாகவோ இருக்கலாம்.**

**i)**

a) மூலக்கூறுகள் உருவாகும்போது அணுக்களுக்கிடையே ஏற்படக்கூடிய பிணைப்பு வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.

b) நைதரசனின் அணுவெண் 7 ஆகும். இரு நைதரசன் அணுக்கள் இணைந்து நைதரசன் மூலக்கூறு உருவாகும்போது நைதரசன் அணுக்களுக் கிடையே இலத்திரன்கள் பங்கிடப்படும் முறையைக்காட்ட புள்ளி, புள்ளடிப்படம் வரைக.

c) மக்னீசியம், கந்தகம் ஆகியவற்றின் அணு எண்கள் முறையே 12 உம் 16 உம் ஆகும். மக்னீசியம், கந்தகம் ஆகியவை உறுதியான அயனை உருவாக்கும்போது அவற்றின் இலத்திரன் நிலையமைப்பில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடுக.

d) உமக்கு நீரில் கரையக் கூடிய ஒரு சேர்வை தரப்பட்டுள்ளது. இச்சேர்வையில் அணுக்களுக்கிடையே உள்ள பிணைப்பின் தன்மையை அறிவதற்கு நீர் மேற்கொள்ளும் பரிசோதனையின் படிமுறைகளைத் தருக.

ii) ஒரு அணுவின் இலத்திரன் நிலையமைப்பிற்கும் அவ் அணுவைக் கொண்டமூலகம் ஆவர்த்தன அட்டவணையில் இருக்கும் நிலைக்கும் இடையே தொடர்பு உள்ளது. M என்னும் மூலகம் மூன்றாம் ஆவர்த்தனத்திலும், மூன்றாம் குடும்பத்திலும் உள்ளது. அதன் கருவில் 14 நியூத்திரன்கள் உண்டு.

a) அம் மூலகத்தின் அணு எண், திணிவெண் ஆகியவற்றைத் தருக.

b) அம் மூலகம் ஒட்சிசனுடன் தாக்கமடைந்து ஒட்சைட்டை உருவாக்கு வதற்கான ஈடு செய்த சமன்பாடு தருக.

**iii) மக்னீசியம் ஐதான ஐதரோக்குளோரிக் அமிலத்துடன் தாக்கமடைந்து ஐதரசன் வாயுவை வெளியேற்றும்.**

a) ஐதரசன் வாயுவை இனங்காண சோதனை ஒன்றைக் குறிப்பிடுக.

b) நாடாநிலையில் உள்ள மக்னீசியமா தூள் நிலையில் உள்ள மக்னீசியமா விரைவாக ஐதரோக் குளோரிக் அமிலத்துடன் தாக்கமடையும் என்பதை அறிவதற்கு நீர் அமைக்கும் பரிசோதனையின் படிமுறைகளைத் தருக.

**03)**

**மனிதன் பெரிய சுமைகளை குறைந்த எத்தனம் கொண்டு அசைக்கும் பொறிகளை அமைத்துள்ளான். மேலும் ஓர் இடத்தில் பிரயோகிக்கப்படும் விசையானது தூர இடத்தில் உள்ள பொருள் மீது செயற்படக்கூடியது மான உத்திகளையும் கண்டறிந்துள்ளான்.**


i)

a) சிறிய எத்தனத்தைப் பயன்படுத்தி பெரிய சுமையை அசைப்பதற்கான பொறிகள் இரண்டின் பெயர் தருக.

b) ஓரிடத்தில் பிரயோகிக்கப்படும் விசையானது தூர இடத்தில் தொழிற்படக் கூடியதாக அமைக்கப்பட்ட திண்மங்களைப் பயன்படுத்தும் இரண்டு உத்திகள் தருக.

c) திரவ ஊடகங்களைப் பயன்படுத்தி விசையை ஊடுகடத்தக்கூடிய உத்திகள், இயந்திரங்களில் பயன்படுத்தப்படும் இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

**ii) திரவ ஊடகத்தினால் விசை ஊடுகடத்தப்படுவதை செய்து காட்டக் கூடிய அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.**




K யில் விசையைப் பிரயோகிப்பதன் மூலம் B மீது தொழிற்படும் சுமையை மேலே உயர்த்தலாம்.

a) KM ஆனது நெம்புகோலாகத் தொழிற்படுகின்றது. KM எந்த வகை நெம்புகோலாகத் தொழிற்படுகின்றது.

b) முசலம் B மீது வைக்கப்பட்ட சுமையினால் திரவ நிரல் மீது ஏற்படுத்தப்படும் அமுக்கத்தைக் காண்க. (B யின் நிறையை புறக்கணிக்கவும்)

c) A,B ஆகிய முசலங்கள் ஒரே கிடைமட்டத்தில் இருக்கும் போது முசலம் A மீது பிரயோகிக்கப்படும் விசையைக் காண்க.

d) KL = 40 cm, LM =10 cm ஆக இருந்தால் K யில் பிரயோகிக்க வேண்டிய எத்தனத்தைக் காண்க.


e) மேலேயுள்ள அமைப்பில் உள்ள பிரதிகூலம் ஒன்றைக் குறிப்பிடுக.

**iii) திண்மங்கள், திரவங்கள் போன்று வளிக்கு அமுக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றல் உண்டு.**

a) வளிக்கு அமுக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றல் உண்டு என்பதற்கான எளிய சோதனை தருக.

b) வளிக்கு அமுக்கத்தை அளவிட ஒரு இரசப்பாரமானி அமைக்கும் படிமுறைகளைத் தருக.

**04) மாணவன் ஒருவன் மேற்கொண்ட பரிசோதனையின் படிமுறைகள் தரப்பட்டுள்ளன.**




i) ஆக்கிமிடிசன் விதியைத் தருக.


ii) a) பொருளின் உண்மை நிறை யாது?
b) நீரினுள் பொருளின் தோற்ற நிறை யாது?
c) B இல் விற்றராசு வாசிப்பு யாது?
d) நீரினால் பொருளின் மீது ஏற்படுத்தப்படும் மேலுதைப்பின் பருமன் யாது?

iii.
a. C இல் விற்றராசு வாசிப்பு யாது?
b. அடர்த்தி தெரியாத திரவத்தினுள் பொருளின் தோற்ற நிறை யாது?
c. அடர்த்தி தெரியாத திரவத்தினால் பொருள் மீது ஏற்படுத்தப்பட்ட மேலுதைப்பின் பருமன் யாது?

vi. அடர்த்தி தெரியாத திரவத்தின் அடர்த்தியைத் துணிக.
v.
a. அன்றாட வாழ்வில் திரவ அமுக்கம் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் 2 தருக.
b. திண்மங்களினூடாக விசை ஊடுகடத்தப் பயன்படும் நுட்பங்கள் 3 தருக.

**05)**

**சோதனைக்குழாயில் உள்ள நீரை வெப்பமேற்றி கொதி நீராவியை மக்னசியம் கொண்ட குழாயினூடு அனுப்பி எதிர்முனையில் தணல்க் குச்சி பிடிக்கும் போது சுவாலை தோன்றியது.**




i)
a) இங்கு நடைபெறும் தாக்கச் சமன்பாட்டைத் தருக.

b) வெளியேறும் வாயு வளியில் உள்ள ஒட்சிசனுடன் தாக்கமடையின் தோன்றும் விளைபொருள் யாது?

ii)
a) மேலே (i) b இல் நடைபெறும் தாக்கத்தின் சமப்படுத்திய தாக்கச் சமன்பாட்டைத் தருக.

b) 8g $H_2$ வாயுவைப் பெறத் தேவையான கொதிநீராவியின் திணிவைக் காண்க. (Mg =24, O =16, H =1)

iii)
a) படிகக்கல் ஒன்றும் கருங்கல் ஒன்றும் உம்மிடம் தரப்படுமிடத்து அவற்றை பாறை, கனியமென எவ்வாறு வேறுபடுத்தி அறிவீர் என எளிய பரிசோதனை மூலம் விளக்குக.

b) பண்படுத்தாத எண்ணெயில் உள்ள அதன் கூறுகளின் பௌதிக நிலையைக் காபன் வீச்சுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்துக.

vi)
a) உலர் றப்பரின் நிறையை அளவிடப் பயன்படும் உபகரணத்தைப் பெயரிடுக.

b) உலர் றப்பரின் அளவைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பங்கள் எவை?

**06) ஆவர்த்தன அட்டவணையிலுள்ள சில மூலகங்கள் பற்றிய தரவுகள் பின்வருமாறு**

**கவனிக்க :** தரப்பட்ட மூலகங்களின் குறியீடு நியமக் குறியீடுகள் அல்ல.

| மூலகம் | கூட்ட எண் | ஆவர்த்தன எண் | நியூத்திரன் எண்ணிக்கை | திணிவெண் |
|---|---|---|---|---|
| A | | | 19 | 39 |
| B | 04 | 02 | | |
| C | 07 | 03 | | 35 |
| D | 01 | | 00 | |
| E | 08 | 03 | | 40 |
| F | 01 | | 01 | |

i)
a) தரப்பட்டுள்ள மூலகங்களில் ஒரே வலுவளவினைக் காட்டும் மூலகங்கள் எவை?

b) தரப்பட்டுள்ள மூலகங்களில் வலுவளவினைக் காட்டாத மூலகம் எது?

ii)
a) தரப்பட்டுள்ள மூலகங்களுள் எவ்விரண்டு சமதானிகளாகும்?

b) மேலே (ii) a இல் குறிப்பிட்ட சமதானிகளைப் பெயரிடுக.

iii)
a) தரப்பட்டுள்ள மூலகங்களுள் மிக உயர்ந்த உறுதிநிலை கொண்ட மூலகம் எது?

b) தரப்பட்ட மூலகங்களில் குறை கடத்திகளைத் தயாரிக்கப் பெரிதும் பயன்படும் மூலகம் எது?

vi)
a) A உம் C உம் சேர்ந்து உருவாகும் சேர்வையின் சூத்திரம் யாது?

b) மேலே (iv) a இல் குறிப்பிட்ட சேர்வையில் காணப்படும் பிணைப்பு வகையைப் பொருத்தமான முறையில் வரைந்து காட்டுக.


v)
a) B உம் C உம் சேர்ந்து உருவாகும் சேர்வையின் சூத்திரம் யாது?

b) மேலே (v) a இல் கூறிய சேர்வையின் பிணைப்பு வடிவினைப் பொருதத மான முறையில் வரைக.

c) ஈரணு வாயு மூலக்கூற்றை உருவாக்கக்கூடிய இரு மூலகங்களைத் தருக.

**07)**

(A) i) வாயு ஒன்றைத் தயாரிப்பதற்கான தொகுதி தரப்பட்டுள்ளது. இத்தொகுதியில் உள்ள முக்கிய தவறு யாது?




(கல்சியம் - 40, காபன் -12, ஒட்சிசன் -16)


ii) இங்கு நடைபெறும் மாற்றத்திற்கான சமப்படுத்திய சமன்பாட்டை எழுதுக.

iii) 75g கல்சியம் காபனேற்றில் இருந்து பெறக்கூடிய காபனீர் ஒட்சைட்டின் நிறை யாது?

iv) இங்கு வெளிவரும் வாயு வளிமண்டலத்திலிருந்து அகற்றப்படுகின்ற இயற்கை நிகழ்ச்சி எது?

v) இங்கு மாற்றங்கள் நடைபெறும்போது புலனங்கங்களினால் பெறப்படும் அவதானம் யாது?

**08)**




i. பச்சைத் தாவரங்களின் ஒளித் தொகுப்புச் செயற்பாட்டிற்குரிய மூன்று காரணிகள் கிடைக்கும் பாதைகள் காட்டப்பட்டுள்ளன.

a) X,Y,Z ஐ இனம் காண்க?

b) இலைவாயினூடாக நிகழும் இன்னோர் தொழிற்பாட்டைக் குறிப்பிடுக.

c) மேற்றோலில் பச்சையம் காணப்படாமைக்குரிய காரணம் யாது?

ii)
a) இலையொன்றின் மேற்புற மேற்றோல் உரியையும், கீழ்ப்புற மேற்றோல் உரியையும் நுணுக்குக்காட்டியில் அவதானித்தால் பெறக்கூடிய வேறுபாடு ஒன்றைக் குறிப்பிடுக.

b) அயடீன் கரைசலின் நிறம் யாது?

c) மாப்பொருள் சோதனை செய்வதற்கான பரிசோதனையின் பிரதான படிமுறைகளைத் தருக.


**09) தென்னை ஒன்றில் இருந்து கீழே விழும் தேங்காய் நீரினால் எடுத்துச் செல்லப்பட்டு பரம்பலடைகிறது. உயர்ந்து வளர்கின்ற ஒரு வித்திலைத் தாவரமான தென்னை பல தேவைகளுக்குப் பயன்படுகின்றது.**

a) தென்னையிலிருந்து தேங்காய் விழுதலை விளக்கும் இயக்கத்திற்குரிய வேக நேர வரைபை பருமட்டாக வரைக.

b) 10 m உயரமான தென்னையிலிருந்து 1.5 kg நிறையுடைய தேங்காய் 10 $ms^{-2}$ எனும் ஆர்முடுகலுடன் புவியில் விழுந்தால் புவியில் தாக்கும் விசை யாது?

c) தென்னையின் பூந்துணரில் தொங்கும் தேங்காயில் தாக்கும் விசைகளைக் குறிப்பிடுக.

**10)**



சிறுவர் குழு ஒன்று ஐதரசன் வாயுவைத் தயாரிப்பதற்கு போத்தலில் சில உலோகத் துண்டு களையும், இரசாயனப் பதார்த்தங்களையும் சேர்த்து முயற்சித்தனர். பலூன் சிறிது நேரத்தில் பூரணமாக ஊதிப்பருத்தது. பலூனின் வாயை நன்கு இறுக்கிக் கட்டி பறக்கவிட்டபோது பலூன் மேலெம்பவில்லை.

i)
a) போத்தலில் எடுக்க வேண்டிய பதார்த்தங்கள் எவை?

b) மாற்றம் நிகழும்போது பெறப்படும் அவதானம் யாது?

ii)
a) பலூன் பறப்பதற்காக சிறுவர்கள் பலூனில் செய்ய வேண்டிய மாற்றம் யாது?

b) பலூன் மேலெழும்புவதற்கு இவ்வாயுவின் எவ்வியல்பு பயன்பட்டது?

iii)
a) பலூன் மிதந்து செல்வதற்கு உதவிய நிகழ்வை விளக்கும் விதி எது?

b) நீரில் அமிழ்ந்துள்ள பிளாஸ்ரிக் உருண்டை ஒன்றை மேலே கொண்டுவர உப்புத்தூளை எவ்வாறு பயன்படுத்தலாம் எனக் கூறுக.

c) அவ்வாறு செய்தபோது உப்பினால் நீரின் எவ்வியல்பு மாற்றமடைந்தது?

d) இச் செயற்பாட்டில் பெறப்பட்ட உண்மையின் அடிப்படையில் இயங்கும் கருவி எது?

e) மிதத்தலில் செறிவு வேறுபடுதல் காரணமாக கடற்கப்பல்களில் செய்யப்பட்டுள்ள முன்னேற்பாட்டு அடையாளம் எது?

# மீண்டும் பரவுகிறது பன்றிக்காய்ச்சல்

## 600 இற்கு மேற்பட்டோர் பாதிப்பு



(புதுடில்லி)

கடந்த சில வருடங்களுக்கு முன்பு மக்களை அச்சத்திற்குள்ளாக்கிய பன்றிக்காய்ச்சல் நோய் தற்போது மீண்டும் இந்தியா வடமாநிலங்களில் பரவத் தொடங்கியுள்ளது. இதனால் 600 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.


இது குறித்து மத்திய சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

எச்1 என்1 எனப்படும் பன்றிக்காய்ச்சல் நோய் காரணமாக ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப் மற்றும் டில்லி ஆகிய நான்கு மாநிலங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன. ராஜஸ்தானில் 18 பேர், ஹரியானா - பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தலா 23 பேர், சண்டிகர் டில்லியில் தலா ஒருவரும் மரணமடைந்துள்ளனர். இந்தாண்டின் முதல் 37 நாட்களுக்குள் இச்சம்பவம் நடந்துள்ளது. மேலும் மேற்கண்ட மாநிலங்களில் சுமார் 494 பேர்களுக்கு பன்றிக்காய்ச்சல் நோயின் அறிகுறி கண்டறியப்பட்டுள்ளது. மேலும் நாடு முழுவதும் சுமார் 600 பேர் எச்1 என்1 வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை தெரிவிக்கிறது.

வடமாநிலங்களில் தொடர்ந்து நீண்ட காலமாக நிலவி வந்த குளிர் கால நிலையும் இந்த வைரஸ் காய்ச்சல் நோய் பரவுவதற்கு ஒரு காரணம் என புதுடில்லியைச் சேர்ந்த மருத்துவர் ஏக்தா குப்தா தெரிவித்துள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு நாடு முழுவதும் 27 ஆயிரத்து 236 பேர் இந்த வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டனர். இதில் 981 பேர் பலியாயினர். 2010ஆம் ஆண்டில் இதே நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 763 ஆகவும், 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் 480 பேர்களும் பலியாயினர். அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தை சேர்ந்த மருத்துவர் ரந்தீப் குலேரியா கூறுகையில் வைரஸ் காய்ச்சல் பெரியவர்கள் மற்றும் முதியவர்களை பாதிக்கிறது. மிக சாதாரண காய்ச்சல் முதியவர்கள் மற்றும் குழந்தைகளை பாதிக்கிறது எனவும், இது போன்ற வைரஸ் காய்ச்சல் நடுத்தர வயது கொண்ட மக்களிடம் அதிகமாக காணப்படுகிறது. சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக்கொண்டாலே வைரஸ் கிருமிகளால் தாக்கப்படும் நோய்களிலிருந்து நம்மை பாதுகாத்து கொள்ள முடியும். இந்த எச்.1 என்1 வைரஸ் நோயை கட்டுப்படுத்த lhkp GS மாத்திரையை உபயோகப்படுத்தலாம் என தெரிவித்துள்ளார். மேலும் வெப்ப நிலை அதிகரிக்கும் சமயங்களான 'இனிவரும் மாதங்களில் இந்த நோயின் தாக்கம் குறைய வாய்ப்பு உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியச் செய்திகள்




# அப்ஸல் குருவுக்கு தூக்கு



தலைநகர்டில்லியில் 2001 ஆம் ஆண்டு நாடாளுமன்ற வளாகத்துக்குள் நடந்த துணிகர துப்பாக்கித் தாக்குதல் சம்பவ சதியில் உதவியதாக குற்றம் நிரூபிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த காஷ்மீர் ஆயுததாரி அப்ஸல் குரு நேற்றுக் காலை டில்லி அருகேயுள்ள திஹார் சிறையில் தூக்கிலிடப்பட்டார்

சட்டம் தனது கடமையைச் செய்துள்ளது என தூக்கு தண்டனை நிறைவேற்றத்துக்குப் பின் கருத்து வெளியிட்ட இந்திய உள்துறைச் செயலர் ஆர் கே சிங் தெரிவித்துள்ளார்.

அப்ஸல் குருவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட செய்தியால் இந்திய ஆளுகைக்குட்பட்ட காஷ்மீரில் கலவரம் வரலாம் என்பதால் அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டுள்ளது.


# கூடங்குளத்தில் விரைவில் மின் உற்பத்தி

(புதுடில்லி)

கூடங்குளம் அணுமின் நிலையம் இன்னும் சில தினங்களில் செயல்பட தொடங்கும் என மத்திய அரசின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அணுசக்தி துறையின் முதன்மை ஆலோசகர் பூஷன் குரோவர் டில்லியில் நேற்றுமுன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது,

இந்தியாவின் முதலாவது ஆயிரம் மெகாவாட் அணுமின் நிலையம் கூடங்குளத்தில் அமைகிறது. இதன் முதல் பிரிவு இன்னும் சில நாட்களில் செயற்படதுவங்கும். இறுதி கட்டத்திற்கு வந்து விட்டோம். இன்ஜினியர்கள் தங்கள் ஆய்வு பணியை முடித்து விட்டனர். பாதுகாப்புக்கு முழு உத்தரவாதம் அளிக்கிறோம்.



முதல் பிரிவில், அணு உலையில் யுரேனியம் நிரப்பும் பணி, செப்டம்பர் 18 ஆம் திகதி ஆரம்பித்து, ஒக்ரோபர் 2 ஆம் திகதியுடன் முடிந்தது. தற்போது பாதுகாப்பு அம்சங்கள் குறித்த முழுமையான ஆய்வு பணி முடிந்து விட்டன என்றார்.

# கிறிஸ்தவ நற்சிந்தனை

## நேர்மை இரக்கம் தாழ்மை வேண்டும்

ஓ மனிதா நல்லது எது என இறைவன் உனக்குக் காட்டியிருக்கின்றார். நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும், கடவுள் முன் தாழ்ச்சியோடு நடந்த கொள்வதையும் அவர் உன்னிடமிருந்து விரும்புகிறார்.

இன்றைய உலகில் இத்தகைய செயல்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. நேர்மையைக் கடைப்பிடிப்பதற்கு உலகில் உள்ள அநீதிகள் பற்றிய உணர்வு எமக்குள் எழ வேண்டும்.

இரக்கம் என்ற பண்பு எங்களில் இருக்குமாயின் அநீதி பற்றிய சிந்தனை எம் உள்ளங்களில் வர இடமளியோம். இரக்கம் என்பது சுருங்கக் கூறின் 'பகைவரிலும் அன்பு கூரல்' இரக்கம் என்பது பாவிகள் மீது காட்டப்படும் அன்பாகும் அது நல்ல நடத்தையாளரையும் திகைக்க வைக்கும். பாவிகள் மீது இயேசு காட்டிய அன்பு பரிசேயரையும், மறைநூல் அறிஞர்களையும் ஆத்திரம் கொள்ள வைத்தது.

"நான் நீதிமான்களை அல்ல பாவிகளையே அழைக்க வந்தேன்" என்கிறார் இயேசு. இவ்வுலகில் உள்ள அனைவரும் ஏதோ ஒரு வகையில் பாவிகள் தான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் பாவம் செய்தவர்கள் தான்.

எனவே எம்மிடம் குடிகொண்டிருக்கும் ஆணவத்தை விடுத்து, பெருமையும் அகங்காரமும் கொண்ட பிலிப்பியருக்கு புனித பவுல் இவ்வாறு எழுதுகிறார் "கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும் (பிலிப்பியர் 2:5) என்றார். கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்.

ஆகவே மனிதராகிய நாம் பிறரிடம் அன்பு காட்டி மனிதர்களை மனிதர்களாக மதித்து, இயலுமானவரை இரக்கம் காட்டி, இறைவனுக்குப் பணிந்து வாழ முயற்சிப்போம்.

வி.பி.தனேந்திரா

முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பெயர்: அ.சகானா
புத்தூர் கிழக்கு
புத்தூர்.

அகவை 03இல்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................
கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# தலைவர்களின்...

(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

சந்திரிகா குமாரதுங்கவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை எதிர்த்து தமிழ் மக்களுக்குச் செய்த இன்னொரு துரோகம். அந்தத் தீர்வுத் திட்டம் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு. அதன் பிராந்திய சபைகள் பல விடயங்களில் இந்திய மாநிலங்களிலும் பார்க்கக் கூடுதலான சுயாட்சி அதிகாரத்தைக் கொண்டவை. கூட்டமைப்புக் கட்சிகள் ஆதரித்திருந்தால் அத்தீர்வுத் திட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறியிருக்கும். அது நடைமுறைக்கு வந்திருந்தால் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைத்திருக்கும்.

அந்தத் தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்று இப்போது கூறுபவர்கள் அன்று அதற்கு ஆதரவு வழங்கியிருந்தால் அண்மைக் காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையும் இழப்புகளையும் தவிர்க்க முடிந்திருக்கும்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தலைவர்கள் தங்கள் சுயநலத் தேவைகளை முன்னிலைப்படுத்தி, தமிழ் மக்களுக்குத் தீமை பயக்கும் முடிவுகளையே எடுத்திருக்கின்றார்கள்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு வருவதை இவர்கள் விரும்பாததே இதற்குப் பிரதான காரணம். இனப்பிரச்சினை இருக்கும் வரை அதைப் பற்றிப் பேசியே இலகுவாக 'நாடாளுமன்றத்துக்குப் போகலாம் என்று நினைக்கின்றார்கள்.

இன்று சர்வதேச சமூகம் பற்றிப் பேசுவதும் இனப்பிரச்சினை தீரக்கூடாது என்ற சிந்தனையின் வெளிப்பாடு.

சர்வ தேச சமூகத்தினால் இனப்பிரச் சினைக்குத் தீர்வைப் பெற்றுத்தர முடியாது என்பது இவர்களுக்குத் தெரியும். தங்கள் சுயநலத்துக்காகத் தமிழ் மக்கள் மத்தியில் சர்வதேச சமூகம் என்ற மாயையை வளர்க்கின்றார்கள்.

# மருத்துவமனையில் ஊழல்; 1200 நோயாளிகள் மரணம்

## பிரித்தானியாவில் சம்பவம்




பிரிட்டனில் உள்ள மிட்ஷா ஸ்டா∴போர்டு (Mid Staffordshire) மருத்துவமனையில் நடந்த முறைகேடுகளால் நோயாளிகளின் மரணம் அதிகரித்ததைத் தொடர்ந்து இன்னும் பல மருத்துவமனைகளில் விசாரணை நடைபெறவுள்ளது.


பிரிட்டனில் உள்ள கோல்செஸ்டர் மருத்துவமனைப் பல்கலைக்கழகம், டாமேசைட் மருத்துவமனை, பிளாக்பூல் மருத்துவமனை, பேசிலடான், துரோக் மருத்துவமனைகள் மற்றும் கிழக்கு லங்காஷயர் மருத்துவமனைகளிலும் உடனடி விசாரணை நடைபெறவுள்ளது.

இவை அனைத்தும் தேசிய சுகாதார சேவை அறக்கட்டளையின் கீழ் இயங்கும் மருத்துவமனைகள் என்பது குறிப்பிடத்தக்கது.ராபர்ட் ∴பிரான்ஸின் அறிக்கை வெளிவந்த பின்னர் 2005 முதல் 2009 வரை ஸ்டா∴போர்டு மருத்துவமனையில் நடைபெற்ற ஊழல்கள் அனைத்தும் அம்பலமாகியுள்ளன. ஊழியர்களின் மிகவும் மோசமான பராமரிப்பினால் 1200 நோயாளிகளுக்கு மேல் பரிதாபமாக உயிர் இழந்துள்ளனர். இதற்காக 290 பரிந்துரைகள் கொண்ட அறிக்கையை ஆய்வுக்குழு சமர்ப்பித்துள்ளது.

தேசிய சுகாதார அறக்கட்டளையின் தலைமை நிர்வாகியான சர்டேவிட் நிக்கல்சன் இறந்தவர்களின் குடும்பத்தினரிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார். மேலும், இந்த ஊழல் வெளியானதும் மருத்துவர்கள் தலைகவிழ்ந்தனர், செவிலியர்கள் கேலிக்குள்ளாயினர் மற்றும் சில உண்மைகளும் நசுக்கப்பட்டன என்று வருத்தத்துடன் தெரிவித்துள்ளார். மருத்துவ இயக்குனர் சர் புரூஸ் கியோக் தலைமையில் இந்த மருத்துவமனை விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்று தேசிய சுகாதார சேவை மையம் அறிவித்துள்ளது.

உலகச் செய்திகள்

# அமெரிக்காவில் பனிப்புயல்; 2000 விமானங்கள் இரத்து




அமெரிக்காவில் பனிப்புயலின் காரணமாக 2000க்கும் அதிகமான விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. அமெரிக்காவில் கடும் பனிப்புயல வீசி வருவதால், சாலைகளில் 2 அடி உயரத்துக்கும் மேல் பனிக் குவியல்கள் காணப்படுகின்றன.

இதனால் நியூயார்க்- பாஸ்டன் ஆகிய பகுதிகளில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டதுடன், 2000க்கும் அதிகமான விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.மேலும் போதுமான வெளிச்சம் இல்லாத காரணத்தால் இரயில்களின் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளன.

# மனநலம் பாதிக்கப்பட்ட பெண்கள்; மனித வெடிகுண்டாக மாற்றம்

## ஈராக்கில் நிகழும் துயரம்





ஈராக்கில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் அடுத்தடுத்து கார் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டதில் 29 பேர் பலியானார்கள். வடக்கு பாக்தாத் நகரின் அருகேயுள்ள காதிமியா என்ற இடத்தில் உள்ள சந்தைப் பகுதியில் வெள்ளிக்கிழமை இரு கார் வெடிகுண்டுத்தாக்குதல்கள் நடந்ததில் 16 பேர் கொல்லப்பட்டனர். மேலும், 43 பேர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மற்றொரு சம்பவத்தில் பாபில மாகாணத்தில் நடந்த இரு கார் வெடிகுண்டு தாக்குதல்களில் 13 பேர் கொல்லப்பட்டனர். மேலும், 26 பேர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.இதனால் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் பலியானவர்களின் எண்ணிக்கை 100ஐ தாண்டியுள்ளது என தகவல் தெரிவிக்கின்றது.

இந்த தாக்குதலை மனநிலை பாதிக்கப்பட்ட இரு பெண்களின் உடலில் வெடிகுண்டுகளை கட்டி ரிமோட் கண்ட்ரோல் முறையில் வெடிக்க செய்துள்ளதாக கூறப்படுகிறது.

# சூரியனிலிருந்து புயல்; விஞ்ஞானிகள் எச்சரிக்கை



சூரியனிலிருந்து பயங்கர புயல் ஒன்று பூமியைத் தாக்கலாம் என பிரித்தானிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.இதனால் செயற்கைக்கோள்கள், விமானம் மற்றும் மின்சார சேவைகள் பாதிக்கப்படும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள இந்த அக்டமியின் செயல்த்தலைவர், பேராசிரியர் பால் கேனன், இந்த புயல் சவாலானது என்றாலும் பிரளயம் ஏற்படுத்தும் அளவுக்கு ஆபத்தானதல்ல.இதை கண்காணிக்க வானிலை மையம் ஒன்றை அமைத்து பெரும் சேதம் நிகழாமல் தடுக்க முடியும் என்றார்.

# இராணுவ தொழிற்சாலை மீது தாக்குதல்; சிரியாவில் 55 பேர் மரணம்



சிரியாவில் இராணுவ தொழிற சாலை மீது வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனம் மோதி தாக்கப்பட்டதில் 55 பேர் பலியாயினர்.சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் இரண்டு ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

அசாத் பதவி விலகாததால் போராட்டக்காரர்களுக்கு அமெரிக்கா ஆயுத உதவி அளிக்கிறது.இதனால் சிரியாவில் தொடரும் சண்டையில் இதுவரை 60 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளனர்.

ஐந்து லட்சம் பேர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். எல்லைப்புற நகரங்க்களை கிளர்ச்சியாளர்கள் தங்கள் வசம் வைத்துள்ளனர்.இதை மீட்க அரசு படைகள் கடும் தாக்குதலை நடத்தி வருகின்றநிலையில் பராக் என்ற இடத்தில் இராணுவ தொழிற்சாலை மீது வெடி மருந்து நிரப்பப்பட்ட வாகனம் மோதியதில் அங்கிருந்த தொழிலாளர்கள் உள்பட 55 பேர் பலியாயினர்.இரண்டு நாட்களுக்கு முன் இந்த சம்பவம் நடந்ததாக பிரிட்டனை சேர்ந்த சர்வதேச பார்வையாளர் தெரிவித்துள்ளார்.

# வேலைதேடிய பெண்ணுக்கு விபச்சாரவிடுதியில் பணி

## ஜேர்மனியில் சம்பவம்



ஜேர்மனியில் விபசார விடுதியில் பணிப்பெண் வேலைக்கு வருமாறு பெண் ஒருவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஐரோப்பிய நாடான ஜேர்மனியில் கடந்த 2002ஆம் ஆண்டு முதல்பாலியல் தொழிலாளர்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்நாட்டை சேர்ந்த இளம்பெண் ஒருவர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தார்.சமீபத்தில் வேலை வாய்ப்பு அலுவலகம் குறித்த பெண்ணுக்கு பணி நியமன கடிதம் அனுப்பியிருந்தது. ஆனால் அதை படித்த பெண்ணும், அவரது தாயும் அதிர்ச்சி அடைந்தனர்.

அக்கடிதத்தில் விபசார விடுதி ஒன்றில் பணிப்பெண் வேலைக்கு வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் விபசாரத்தில் நேரடியாக ஈடுபட வேண்டியதில்லை என அதில் எழுதப்பட்டிருந்தாலும், அந்த மாதிரியான இடத்தில் நான் வேலை செய்யப் போவதில்லை என அந்த பெண் உறுதியாக மறுத்துவிட்டார்.

# கல்வி அதிகாரிகள் தவறிழைத்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவல்ல

## கூறுகிறார் மகிந்த ஜெயசிங்க



(கொழும்பு)

பாடசாலைக்கு பணம் வழங்குவதற்கு அயல் தோட்டமொன்றில் தேங்காய் திருடியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஹொரணை பிரதேச மாணவி தொடர்பில் அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கையை ஆசிரிய தொழிற்சங்கங்கள் விமர்சித்துள்ளன.

இந்தச் செயற்பாடு தொடர்பான பொறுப்பை கல்வி அதிகாரிகள் ஏற்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதம செயலாளர் மகிந்த ஜயசிங்க கருத்து வெளியிடுகையில் மாணவர்கள் விடயத்தில் அதிகாரிகள் தவறிழைத்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவல்ல எனக் கூறியுள்ளார்.

தகவல்கள் வெளிவராத இத்தகைய ஆயிரக்கணக்கான சம்பவங்கள் நாட்டில் இடம்பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குழுக்கள் அமைத்து விசாரணை முன்னெடுக்கும் போர்வையில் காலத்தை கடத்தாது பாடசாலைகளின் சுமையை பெற்றோர் மீது சுமத்தும் சுற்றுநிருபங்கள் உடன் இரத்துச் செய்யப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பெற்றோரிடமிருந்து பணம் அறவிடப்படுவதை தடுக்கும் பட்சத்தில் மாத்திரமே எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்ய முடியும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதம செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரச கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவு குறித்து கவலை அடைவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

பாடசாலைகளின் சுமை இன்று பெற்றோர் மீது சுமத்தப் படுவதை காணக்கூடியதாக உள்ளதெனவும் இதனால் வசதி குறைந்த பெற்றோரும் பிள்ளைகளும் மன உளைச்சலுக்கு ஆளாவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைக்கு முற்றுபுள்ளி வைக்க நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கட்டாயப்படுத்தியோ அல்லது தவறான முறையிலோ மாணவர்களிடம் பணம் சேகரிக்கும் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பான சுற்றுநிருபம் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

# வயல்வெளிகளில் ஈரப்பதன் இயந்திர அறுவடை பாதிப்பு

(கிளிநொச்சி)

வன்னி மற்றும் யாழ்ப்பாணத்தில் அண்மையில் பலத்த மழை பெய்து வயல் நிலங்களில் ஈரப்பதன் காணப்படுவதன் காரணமாக விவசாயிகள் நெல் அறுவடை இயந்திரங்களை அறுவடைக்குப் பயன்படுத்துவதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதன் காரணமரக வயல் நிலத்தில் காய்ந்திருக்கும் நெற்பயிரை மனித வலுவைப் பயன்படுத்தியே அறுவடை செய்ய வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கும் அவர்கள், அவ்வாறு மனித வலுவைப் பெறுவதிலும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நெல் அறுவடை இயந்திரங்களைப் பயன்படுத்துவதனால் இனிமேல் மழை பெய்யாமலும் இருப்பதுடன் வயல் பகுதி உலரவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே ஒட்டுமொத்தத்தில் இம்முறை நல்ல நெல் விளைச்சல் இருந்த போதும், இறுதி நேரத்தில பெய்த மழையினாலும் அந்த அறுவடை பாதிப்பிற்குள்ளாகியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (பா)

# உதவி கோருகின்றனர்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 14 வயதான ஜெயக்குமார் கனிஷ்டா என்பவர் இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சென்னைஅப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு எதிர் வரும் மூன்று வருட காலங்களுக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட வேண்டியுள்ளது. இவருக்கான சிகிச்சைக்கு 4 இலட்சம் ரூபாவும், முதல் பத்து மாத தீவிர சிகிச்சை, இரத்தமாற்று, தொற்று நீக்கி ஆகிய உப வைத்திய செலவினங்களுக்கு 6 இலட்சம் ரூபாவும் தேவைப்படுவதாக அப்பல்லோ மருத்துவமனை வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெருந்தொகையான வைத்தியச் செலவினை மேற்கொள்ளும் வசதிகளற்ற நிலையில் இந்தச் சிறுமியின் பெற்றோர்கள், உபகார சிந்தையுள்ள மக்களிடம் உதவி கோருகின்றனர்.

இந்தச் சிறுமியின் வைத்தியச் செலவில் பங்கேற்க விரும்பும் பரோபகாரிகள் அப்பல்லோ மருத்துவமனையின் விசேட கவனிப்புப் பிரிவில் கனிஷ்டாவுடன் 242033 உடன் அல்லது 044433151294 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். டாக்டர் ரேவதிராஜ், அப்பல்லோ மருத்துவமனையின் விசேட கவனிப்பு அதிகாரி.

தொடர்புகளுக்கு : ஜெயக்குமார் அனுஷா (தாய்) கணக்கு இல : 8100022049 கொமர்ஷல் வங்கி, வெள்ளவத்தை, கொழும்பு. தொ.பே. 00919710021084

தகவல் : தியாகராஜா சசிகுமார் (செல்வம் - பிரான்ஸ்) (சிறிய தந்தை) தொ.பே: 0033751049808, 0033761392047

## தனியார் பஸ்...

நூற்றுக்கு மேற்பட்ட பஸ்உரிமையாளர்களும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் கடந்த ஆறு மாத காலமாக யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமிடையே சேவையில் ஈடுபடும் பஸ்கள் வழி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதில் ஏற்பட்டுவந்த இழுபறிநிலை, வழி அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோத மாக சேவையில் ஈடுபடும் பஸ்கள் சம்பந்தமாகவும், யாழ்ப்பாணத்திலும் வெள்ளவத்தையிலும் பஸ்தரிப்பு நிலையங்களில் பயணிகளுக்கு இடைத்தரகர்களால் ஏற்படும் அசௌகரியங்கள், பயணிகளின் ஆசனப்பதிவுகள் மேற்கொள்வதில் போலி முகவர்களைத் தடை செய்வது சேவையில் ஈடுபடும் பஸ்களில் பரிசோதனை என்ற பெயரில் பாரபட்சமான செயற்பாடு, காலதாமதம் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படவுள்ளதுடன், பஸ் உரிமையாளர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் குறித்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

பஸ் உரிமையாளர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்த அமைச்சர் இக்கலந்துரையாட லில் ஆராயப்பட்ட விடயங்கள் அனைத்திற்கும் ஒரு மாத காலத்திற்குள் தீர்வு காணப்படும் என்று உறுதியளித்தார்.

உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் மாதாந்தம் வழி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு மாதாந்தம் செலுத்தி புதுப்பிக்கலாம் என்று வெள்ளவத்தை, கொட்டாஞ் சேனை, யாழ்ப்பாணம் ஆகிய பஸ்தரிப்பு நிலையங்களில் விசேட பொலிஸாரும், தேசிய ஆணைக்குழு அதிகாரிகளும் கடமையில் ஈடுபடுவார்கள் என்றும் புதுப்பிக்காமல் இருக்கும் 60 இற்கு மேற்பட்ட பேருந்து உரிமையாளர்களின் பத்திரங்களை இரண்டுவார காலத்திற்குள் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு தேசிய ஆணைக்குழு அதிகாரிகளுக்கு பணித்ததோடு இரு வாரத்திற்குள் மீண்டும் உரிமையாளர்களுடன் பேசி அனுமதிப் பத்திரத்திற்குரிய அதிகரித்த தொகை 11 இலட்சம் ரூபாவை பரிசீலித்து அமைச்சரவை அனு மதிப்பத்திரத்திற்கு பரிந்துரை செய்வதாக உறுதியளித்தார்.

## நாடு திரும்பினார்...

நாயகர் மண்டபத்தில் அவருக்கு கோவில் அதிகாரிகள் பட்டு வஸ்திரம் அணிவித்துள்ளதுடன் பின்னர் லட்டு பிரசாதங்களையும் வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதியுடன் இலங்கையின் முதல் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் 70 பிரதிநிதிகளும் வழிபாடுகளில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சுவாமி தரிசனம் மேற்கொள்வதற்கு 'மஹா துவாரம்' வழியைத் தவிர்த்த அவர் சாதாரண பக்தர்களுக்கான வைகுந்தம் வரிசையில் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்பின்னர் விசேட விமானமொன்றின் மூலம் அவர் இலங்கையை வந்தடைந்தார்.

## தாய்ப்பால்....

த்த குழந்தையின் சடலம் உறவினர்களால் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலத்தைப் பார்வையிட்ட வைத்தியர், சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின்னரே குழந்தை இறந்ததற்கான காரணத்தைக் கண்டறிய முடியுமென உறவினர்களிடம் தெரிவித்ததனை அடுத்து சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் குழந்தை பால் குடிக்கும் போது பால் புரைக்கேறி இறந்திருக்கலாம் எனவும் குழந்தையின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (பா)

## எல்லா நாட்டிலும்...

சங்களில் கடும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று அதிகாலை 3.00 மணிக்கு ஜனாதிபதியும் அவரது குழுவினரும் திருப்பதியில் சுப்ரபாத சேவையில் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். சுமார் ஒரு மணிநேரம் கோயிலில் சிறப்பு தரிசன்த்தில் இவர்கள் ஈடுபட்டதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

தரிசனம் முடித்துவிட்டு கோயிலிலிருந்து வெளியேறிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, செய்தியாளர்களிடம் உரையாற்று கையில், நான் திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்ய வந்துள்ளேன்.

ஏழுமலையானை தரிசனம் செய்தது எனக்கு மன நிம்மதி அளிக்கிறது. எனக்கு எல்லா நாட்டிலும் எதிர்ப்பு உள்ளது. இதைப் பற்றி நான் கவலைப்படமாட்டேன்.

அத்துடன், இலங்கையின் உண்மை நிலையை காண்பதற்காக வருகைதருமாறு இந்திய ஊடகவியலாளர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனநாயக நாடொன்றில் காணப்படுகின்ற முக்கிய இலட்சினையாகவே இந்தியாவில் நடந்த ஆர்ப்பாட்டங்கள் அமைந்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தமது தல யாத்திரைக்காக இந்திய அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதி இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

## நிவாரணம்....

டம் ஒன்று நடத்தப்பட்டது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுடன் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போதே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டது. இந்தக் கலந்துரையாடல் மன்னார் உயிலங்குளம் மாவட்ட விவ்சாய பயிற்சி நிலையத்தில் இடம் பெற்றது.

குறித்த் கலந்துரையாடலுக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், விவசாய அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பிரதான வாய்க்கால் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மற்றும் விவசா யிகள் எனப் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

## ஜெனிவா...

தேசிய இயக்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளதாவது,

இலங்கை மீது பொருளாதாரத் தடையை விதிக்கும் நோக்குடன் சில குழுக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

மனித உரிமைகள் மாநாட்டுடன் இலங்கைக்கு பொருளாதாரத் தடையை ஏற்படுத்துவதற்கான பிரசார வேலைகளை தற்போதும் சிலர் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கான ராஜதந்திர நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## தேசியக் கொடி....

தடுப்பில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

பொலிஸ் விசாரணையின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாக கோப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

## இந்தியத்....

தெரிவித்தனர்.

இந்தியத் தூதுவரின் செயலாளர் நேற்று முன்தினம் காலை இந்தியத் தூதரகத்திற்கு வேலைக்குச் சென்று இரவு 8.00 மணியளவில் வீட்டுக்குத் திரும்பியுள்ளார். அதன் போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு திருடப்பட்டுள் ளதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து இது தொடர்பில் யாழ் குற்றத்தடுப்பு பொலிஸ பிரிவில் நேற்று இரவே முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். (25)

## ராஜீவ்..

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியால் நிராகரிக்கப்பட்டால் விரைவில் மூவருக்கும் இரகசியமாக தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படலாமென இந் திய ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன.

# ஜெனிவாவில் இலங்கையை கைவிடமாட்டாது இந்தியா

## அமைச்சர் செனவிரத்ன நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை அமர்வுக்கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணைக்கு எதிராக இந்தியா வாக்களிக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியா சென்றுள்ள உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே.செனவிரத்ன திருவானந்தபுரம் பகுதியில் இந்திய ஊடகவியலாளர்களை சந்தித்த போது இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமை விடயத்தில் குறிப்பிட்டு சொல்லக் கூடிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்தியா இந்த விடயத்தில் மாறுபட்ட இடத்தில் சிந்திக்கும் எனத்தாம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

வட.கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் இன்று சுதந்திரமாக அங்கு சிவில் நிர்வாகப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கை இந்தியாவிற்கிடையிலான உறவு மேலும் வலுவடைந்து செல்கிறது.

இலங்கைக்கான மிகப் பெரிய ஏற்றுமதியாளர் இந்தியா எனவும் கடந்த வருடத்தில் மாத்திரம் இலங்கை - இந்தியாவிற்கிடையில் 5 மில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதாகவும் இலங்கையில் மின்சார திட்டத்தை ஊக்குவிக்க இந்தியா உதவி புரிவதாகவும் அமைச்சர் செனவிரத்ன தெரிவித்தார்.

கேரளாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கலாசார மற்றும்



உணவுத்துறையில் பாரிய ஒற்றுமை காணப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# மத்தியவங்கி ஆளுநரை பதவி விலக்க வேண்டும்

## கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் திறைசேரியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர ஆகியோர் பதவி விலக வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஊழியர் சேமலாபநிதி மற்றும் தி பினான்ஸ் நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையிலான மோசடியான கொடுக்கல் வாங்கல்களுக்கு குறித்த இருவருமே பொறுப்பு என நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

கப்ரால் மற்றும் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழியர் சேமலாபநிதியத்தில் பங்களிப்புச் செய்த பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக குறித்த இருவரும் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தி பினான்ஸ் நிறுவனத்தின் 30 ரூபா பங்குகளை ஊழியர் சேமலாபநிதியம் தலா 50 ரூபா என்ற அடிப்படையில் கொள்வனவு செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் உரிய விசாரணை நடாத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென யோகராஜன் வலியுறுத்தியுள்ளார்.

# தேங்காய் திருடிய மாணவியை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியது தவறு

## – நீதியமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைத் தேவைக்காக 8 தேங்காய்கள் திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்ட 13 வயதுச் சிறுமியை பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது தவறு என்று நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

18 வயதுக்குட்பட்ட ஒருவர் மீது திருட்டுக் குற்றச்சாட்டு சுமத்தப்படும்போது, திருட்டுப் பொருளின் பெறுமதி ஐயாயிரம் ரூபாவுக்கு குறைவாக இருந்தால் அவரை நீதிமன்றத்தின் முன்னால் ஆஜர்படுத்தாமல் மீடியேஷன் போர்ட் எனப்படுகின்ற மத்தியஸ்த சபை ஒன்றின் முன்னாலேயே ஆஜர்படுத்த வேண்டுமென்று நீதியமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா பிபிசி தமிழோசையிடம் கூறினார்.

இது தொடர்பான சட்டத் திருத்தம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டுவரப்பட்டதாகவும் அதுபற்றிய தெளிவின்றியே இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிசார் செயற்பட்டிருக்கலாம் என்றும் கமலினி டி சில்வா சுட்டிக்காட்டினார்.

குறித்த 13 வயது சிறுமியின் வழக்கில் தீர்ப்பு இன்னும் அளிக்கப்படவில்லை என்றும் சம்பவ தினத்தன்று பதில் நீதவான் ஒருவரே வழக்கை விசாரித்துள்ளதாகவும் நீதியமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இப்படியான வழக்குகளை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லாமல் மத்தியஸ்த சபைகளுக்கே கொண்டுசெல்லுமாறு பொலிஸாருக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் அடுத்த கட்டமாக முன்னெடுக்கப்படும் என்றும் நீதியமைச்சு கூறியது.

தலைமை நீதியரசர் தலைமையிலான நீதிபதிகளுக்கான பயிற்சி நிறுவனம் ஊடாக நீதவான்களுக்கும் தெளிவூட்டும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் நீதியமைச்சின் செயலாளர் பிபிசியிடம் கூறினார்.

# தரமற்ற டீசல் தடுத்துவைப்பு

(கொழும்பு)

லங்கா ஐ.ஓ.சீ நிறுவனத்தினால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட டீசல் தொகை உரிய தரத்தில் இல்லாத நிலையில், கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு சுமார் 5 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் தொகை தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனை தற்போது இரண்டாம் கட்ட பரிசோதனைக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் உரிய தரம் நிரூபிக்கப்படும் வரையில், இதனை விநியோகிக்க இடமளிக்கப் போவதில்லையென பெற்றோலியக்கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் அதிகாரி தெரிவிக்கையில்,

இறக்குமதி செய்யப்படுகின்ற எரிபொருட்களை பலதடவைகள் சோதனைக்கு உட்படுத்துவது அசாதாரணமான விடயம் இல்லை என்று தெரிவித்தார்.

# 6 இலட்சம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் கடந்த வருடத்தில் விநியோகம்

(கொழும்பு)

போக்குவரத்துத் திணைக்களம் கடந்த வருடத்தில் மாத்திரம் 6,18,053 சாரதி அடையாள அட்டைகளை வழங்கியுள்ளதாக போக்குவரத்துப் பிரதியமைச்சர் ரோஹன திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 3,47,959 புதிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், புதிதுபடுத்தப்பட்ட 2,31,465 அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டன எனத் தெரிவித்தார்.

தினந்தோறும் ஒரு நாளைக்கு 3150 சாரதி அடையாள அட்டைகளை வழங்கிவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சாரதி அடையாள அட்டை வழங்குவதில் ஏற்பட்டதாகக் குறிப்பிடப்படும் குளறுபடிகள் பற்றியும், சாரதிகளைப் பயிற்றுவிக்கும் பாடசாலைகளினால் ஏற்படும் குளறுபடிகள் பற்றியும் தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# நவீன முறையிலான புற்றுநோய் சிகிச்சை; மஹரகமவில் புதிய விடுதி நிர்மாணம்

நவீன முறையிலான புற்றுநோய் சிகிச்சையினை மேற்கொள்ளும் வகையில் மஹரகமவில் புதிதாக விடுதியொன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதாக சுகாதார பிரதியமைச்சர் லலித் திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வருடமொன்றிற்கு நாட்டில் 20,000 புற்றுநோயாளர்கள் பதிவு

புற்றுநோய் சிகிச்சைக்கு கடந்த ஆண்டு மாத்திரம் அரசாங்கம் 2000 மில்லியன் ரூபா நிதியை செலவு செய்துள்ளது.

வருடமொன்றுக்கு 20 ஆயிரம் புற்று நோயாளர்கள் பதிவு செய்யப்படுகின்றனர். ஏழு மாவட்டங்களில் இவர்களுக்குத் தேவையான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

புற்றுநோய் போன்ற தொற்றா நோய்களை கட்டுப்படுத்த தேவையான சகல வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளதுடன், முதற்கட்டமாக 900 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புற்று நோயாளர்களுக்கு தேவையான நவீன முறையிலான சிகிச்சைகளை வழங்க தேவையான சகல வசதிகளையும் கொண்ட தொகுதி ஒன்றை 1438 மில்லியன் ரூபா செலவில் மஹரகமவில் புதிதாக நிர்மாணிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட் டுள்ளது. சுமார் 20 மாத காலத்திற்குள் இதனை நிர்மாணித்ததும் தேவையான சிகிச்சைகளை துரிதமாக வழங்க முடியும்.

ஐந்து சத்திரசிகிச்சை பிரிவுகள், 358 விடுதிகள், நவீன சிகிச்சைப் பிரிவுகள் இதில் உள்ளடக்கப்படவுள்ளன. புற்றுநோயை ஆரம்பகட்டத்திலேயே அடையாளம் கண்டு சிகிச்சை அளிக்கும் முறைமை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மாவட்ட மட்டத்தில் வைத்தியசாலைகளிலுள்ள நிபுணர்களுக்கும், மருத்துவர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நாடளாவிய ரீதியில் புற்றுநோயை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை பல்வேறு அமைச்சுக்களுடன் இணைந்து செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## டெங்குத் தொற்றுக்கு ஒருவர் இலக்கானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றும் ஒருவர் டெங்கு நோய்த்தெற்றிற்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் சுகாதார வைத்தி அதிகாரி பிரிவில் இருந்தே அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவருடன் இந்த வருடம் 40 நாட்களில் 76 பேர் டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## வெளிவந்தது இசட் புள்ளி

2011 க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கான இசட் புள்ளி வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி www.ugc.ac.lk என்ற பரீட்சைகள் திணைக்கள இணையத்தில் இசட் புள்ளி பெறுபேறுகளை பார்வையிட முடியும்.


## மரண அறிவித்தல்



**சின்னவன் – மாணிக்கம்**

மீசாலை தெற்கு மீசாலையை பிறப்பிடமாகவும் கொழும்பு 13 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் மாணிக்கம் 04.02.2013 அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று 10.02.2013 அன்று நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
மகன் - விநாயகமூர்த்தி
772474013
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.